சந்நிதிப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தலில்
சமயவளர்ச்சி கருதி இவ்வெளியீட்டிதழ்
உதயமாகியது



தொண்டைமானாறு
ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின்

# அற்புதங்களும் அனுக்கிரகங்களும்

2012

ஸ்ரீவாணி வெளியீட்டகத்தின்
4வது இலவச வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


தேரில் வருகிறான் சந்நிதி வீதியிலே... - **ஏழாலை மு.இந்திராணி** .. 04

மீண்டும் நடக்கவைத்த எங்கள் குலதெய்வம் - **திருமதி ரெத்னா ரவீந்திரன்** . 05

இஃது சந்நிதியானின் நேரடி நெறிப்படுத்தல்களிலொன்று - **சி.சிவகுமாரன்** . 07

கண்ணுக்கு ஒளிதந்த கந்தனவன் - **செ.உலகநாதபிள்ளை (J.P)** . 08

சந்நிதி முருகன் அருளால் எனக்கு கிடைத்த அனுக்கிரகங்கள்
- **இ.வரதீஸ்வரன்** (செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு) .09

உத்தமனார் விரும்புவது உள்ளக்கமலம் - **R.சுகுமாரன்** (O.I.C. Jaffna) 11

சிறுநீரக நோயைக் குணப்படுத்திய குமரக்கடவுள் - **தி.மாணிக்கரெத்தினம்** . 14

சஞ்சலம் தீர்த்த சந்நிதி வேலன்! - **செல்வி சுதர்சினி, குப்பிளான்** . 15

அனுக்கிரகங்களில் இதுவும் ஒன்று - **ந.பிரசாந்தன், மல்லாகம்** (UK)... 16

லண்டனில் சக்திவேலன் வளர்ச்சிப் பாதையில்..! 17

கிடைத்த மாற்றங்களும்,அற்புதங்களும் Evangaline Yalinie.India.(U.K) 18

எத்திக்கும் புகழ் மணக்கும் திருப்புகழ் - **வல்வையூர் அப்பாண்ணா** 19

சரவணபவனின் அற்புதச் செயல் - **பொன்னர் வல்லிபுரம்** .. 22

துறவற நிலையைத் தந்ததேனோ...! முருகா..!! - **சி.சிவகுமாரன்** . 23


## நிரந்தர வேலையை அருளிய வேற்பெருமான்!

கடந்த ஆண்டு (2011) நடைபெற்ற தேர்த்திருவிழாவிற்கு என்னையும் முருகன் அழைத்திருந்தான். அங்கு நடைபெற்ற அற்புதக் காட்சிகளைக் கண்டும், "அற்புதங்கள்" நூலினைப் படித்தவுடனும் மனமுருகி, "முருகா! நம்பமுடியாதளவிற்கு அற்புதங்கலெல்லாம் நிகழ்த்திக்கொண்டிருக்கிறாயே! நான் படித்துவிட்டு நீண்ட நாட்களாகவே நிரந்தர வேலையற்றிருக்கிறேன். இன்னும் என்னையேன் சோதிக் கின்றாய். எப்போது எனக்கு விடிவு வரும்?" என சந்நிதியானிடம் மனமுருகி வேண்டி னேன். அடுத்தநாள் மாலை வீடு திரும்பியவுடன் எனது சகோதரி ஒரு கடிதத்தை நீட்டினார். ஆவலுடன் உடைத்துப் பார்த்தபோது, என்ன அதிசயம்! ஏற்கனவே 2009ம் ஆண்டு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த அதே வேலைக்கு 2011ம் ஆண்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். தேர்வுமுடிந்து 3 மாதங்களாகியும் எனக்குப் பதில் கிடைக்கவில்லையே என மிக மனவருத்தத்துடன், சூரன்போர் விழாவுக்கு வந்து மனமுருகி வேண்டுதல் செய்தவுடன், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் குழு எழுதுனர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர் என்ற கடிதம் கிடைத்தது. எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் முருகன் அருளிய அனுக்கிரகத்தை இவ்வருட அற்புதங்களில் எழுதவேண்டுமென்ற வேண்டுதலுக்கும் அருள் கிடைத்துள்ளது. இதுமட்டுமன்றி இவ்வருட மகோற்சவ சுவரொட்டியும் எனது கேற்றில் ஒட்டி மறுபடியும் ஞாபகமூட்டியிருக்கிறார் என்றே கருதுகிறேன்.

- **கருணை, உரும்பிராய். 0776906631**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன
குரு முதல்வர்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள் வழங்கிய

## ஆசியுரை

**முருகன் அடியார்களுக்கு !**

சந்நிதி வேலவனின் அற்புதங்களை நூல்வடிவில் கொண்டு வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆற்றங்கரையில் எழுந் தருளியிருந்து, அற்புதங்கள் பல படைத்து, அன்னதானக் கந்தன் எனப் போற்றி, எல்லோரையும் தன்வசப்படுத்தும் வேலவனின் அற்பு தங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இததோற்சவத்திலன்று நூல் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி.

"சந்நிதி வேலவனின் அற்புதங்கள்" இவ்வருடமும் நான்காவது தொடராக வெளிக்கொண்டு வருகின்ற சி. சிவகுமாரனை வாழ்த்துகின்றோம்.

முருகனை வழிபடும் அடியவர்களிற்கு எத்தனை வகையில், முருகன் அருள்புரிகின்றான் என்பதை அனுபவித்த, அனுபவ நூலாக வெளிவருவது அனைவருடைய சிந்தனையையும் தூண்டுவதாகும்.

இந்நூல் அச்சுப்பதிக்கும் அச்சகத்தினருக்கும், வெளியீட் டாளருக்கும், நிதியுதவி வழங்கும் அன்பர்களுக்கும் இறை இன்பம் கிடைப்பதாக.

இந்நூலைப் படித்து அனைவரும், எந்நிதியும் தரும் செல்வச் சந்நிதியானை வழிபாடு செய்வோமாக. தொடர்ந்து நூல் வெளிவர சந்நிதியானைப் பிரார்த்திக்கின்றோம்.

*- என்றும் வேண்டும் இன்பஅன்பு -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீ செல்வச்சந்நிதி
வள்ளி தேவசேனா சமேத சிங்காரவேலனின்
2012ம் ஆண்டு மகோற்சவ பிரதமகுரு
**சிவஸ்ரீ ஆ.சிவசண்முகம்ஐயர் அவர்களின்**

## ஆசியுரை

ஸ்ரீசெல்வச்சந்நிதி வேலனின் அற்புதங்கள் அனந்தம். கலியுகவரதன் கந்தபுராண காலமுதற் கொண்டே சந்நிதி, சந்நிதிபூசைக்கு ஏற்றவகையில் வல்லியாறு (தொண்டைமானாறு) என்ற தொடர்பிணைப்புடன் சங்கமிக்க வைக்கின்றது.

பத்திரசக்தி மூர்த்தமான, தெய்வபாலனுமாகிய முருகன் தன்னை வந்திப்பவர்களுக்கு மட்டுமல்ல நிந்திப்பவர்களுக்கும் தமது அற்புத அருளாடல் புரிகின்ற எம்பெருமான், இலங்கை இந்திய ஆச்சாரிகள் பலர் கூடி, பல பல கோடிகள் கொடுத்தாலும் நிர்மாணிக்க முடியாத சித்திரப் பெருந்தேர் 1984, 85ம் ஆண்டுகளில் மூன்றுமுறை மட்டும் வலம்வந்த பின் அழித்தல் என்கின்றதைக் காட்டும் அக்கினியுடன் சங்கமமாகியது. அதன்பின்பும் பழைய கட்டுத்தேர் 2002 வரை வலம்வந்து, 2003ம் வருட தேர்த்திருவிழாவில் வள்ளியம்மா வாசல்வரை வலம்வந்து குடைசாய்ந்த போது நாமனைவரும் பெரும் ஆதங்கப்பட்டோம். அதன் தாற்பரியம் மறுவருடம் (2004ம் ஆண்டு) முன்னவன் ஆனைமுகத்தவனுக்கும், தமக்கு மாக இரண்டு புதிய தேர்கள் வலம்வந்தன. மறுவருடம் வள்ளி தேவசேனா சமேத சண்முகப் பெருமானுக்கும் தேர் உருவாகியது. மூன்று தேர்கள் மூன்றாம் வீதியில் வலம் வருகின்றன. 1986ம், 87ம் ஆண்டுகளில் நிலவிய யுத்த சூழ்நிலையில் பெரிய தேர், பெரிய காண்டாமணியுடன், ஆலயசூழல், தொண்டைமானாறு முழுவதுமாக பாதித்தபோது, நாம் எண்ணினோமா 2002ல் புதிய மாமணி, 2004, 2005ல் தேர்கள் 2008ம் ஆண்டில் புதிய சுற்றுமண்டபம் என்பன சந்நிதியில் அமையுமென.

1987ம் ஆண்டு தொண்டைமானாறு மக்களனைவரும் பெரும் பாதிப் புடன் இடம்பெயர்ந்தனர். அப்போது அடியேனும் கனடா செல்லவேண்டுமென இந்தியா வரை சென்றபோது, எம்மை மேலும் விலகவிடாது தடுத்தாட் கொண்டு மீண்டும் நாடுதிரும்பி **“சந்நிதிதான் உனக்கு சங்கமம்”** என்கின்ற நிலைதந்து சக்திவேல் தந்த அற்புதம், அனுக்கிரகம், அனுபூதி நிலையில் நின்று ஆனந்தபரவசம் பெறுகின்ற பெருமை எண்ணிலடங்காதவை.

**“உயவல் ஊர்தி உடையவன் தகரேறுகின்றவன்
ஓம் என்னும் மயிலேறும் பெருமான்**

மனமெல்லாம் ஏற்றம்பெற அற்புத அருளாடல் புரிகின்ற பெரு மைக்கு அடியேன் என்னவென்று ஆசிகூறுவது. ஆவணிப் பூரணையில் புனித அருள்பெற அனைவரும் அருகதை அடைவோமாக.

அன்பர் திரு. சிவகுமாரன் அவர்கள் சந்நிதி வேலனின் அற்புதங் களை அச்சுவடிவில் வெளியிடுவது போற்றுதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

இவ்வருடமும் செல்வச்சந்நிதியானின் மகோற்சவ காலத்தில் இறையருளால் அவனின் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற நூல், சந்நிதி அடியார் திரு. சிவகுமாரன் அவர்களால் வெளிக் கொண்டு வரப்படுவது பாராட்டுக்குரியது.

அவர் இத் தெய்வ கைங்கரியத்தை கடந்த பல வருடங்களாக ஆற்றிவருவதை அறிந்து மகிழ்ந்தேன். கடந்த காலங்களில் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற நூலை விட, வல் வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் அருளாட்சி, அம்மன் வரலாறு, அன்னையின் அற்புதங்கள், பஜனைப் பாடல்கள் போன்ற பல நூல்களையும், இவற்றிற்கு மகுடம் வைத்தாற்போல "சந்நிதியானின் அற்புதங்கள்" என்ற நூலையும் ஆக்கி இலவசமாக அடியார்களுக்கு அளித்துள்ளார். இவை முருகனடியார்களின் ஞானப்பசிக்கு இடப்பட்ட ஞானதானமாகவே நான் கருதுகிறேன். இது மெய்யடியார்களை நன்னெறி வழிநடத்தி அவர்களுக்கு நல்வழி காட்ட உதவும் என்றும் திடமாக நம்புகிறேன்.

அன்னதானக் கந்தனின் அருட்பெரும் கடாட்சத்தில் அவனின் அற்புதத்தை! அதிசயத்தை!! மகிமையை!!! இடைவிடாது உலகுக்கு எடுத்தியம்பும் பெரும்பணியை முன்னெடுக்கும் அடியவர் திரு. சிவகுமாரன் அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும், வாழ்த் துக்களையும் தெரிவிக்கின்றேன். இவரின் பணி தொடர இறை யருளை இறைஞ்சுவதுடன், இவரது பணிக்கு உறுதுணையாக நிற்கும் உள்ளங்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துப் பணிகிறேன்.

இ.த.ஜெயசீலன்,
பிரதேச செயலர்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

R. T. JEYASEELAN
DIVISIONAL SECRETAR
VADAMARADCHY NORTH
POINT PEDRO

கந்தநம ஐந்துமுகர்தந்த முருகேசநம கங்கையுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலைபுனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பரமதாம்
எந்தைநம என்றுமிளையோய்நம குமாரநம என்றுதொழுதார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேரில் வருகின்றான் சந்நிதி வீதியிலே

1. ஆற்றங்கரையில் அற்புதமாய் வீற்றிருக்கும்
அழகன் முருகன் தேரில் வருகின்றான்
போற்றிப் புகழ்ந்து துதிபாடிப் பணிந்திடுவோம்
போர்புரிந்த கொடும் சூரனை வதைத்து
சீற்றம் தணிந்து தேவகுஞ்சரியை மணந்தான்
சிவனுக்கும் உமைக்கும் செல்வத் திருமகனாக
தோற்றம் கொண்டது ஓர் பொய்கையிலே - இன்று
தேரில் வருகின்றான் செல்வச்சந்நிதி வீதியிலே.

2. ஆலமுண்ட அரசனுடைய மைந்த னவன்
ஆலிலையில் பருப்போடு அமுது கொள்வான்
காலம் முழுவதும் அவன் காலடியில் சரணடைந்தால்
கவலைகள் யாவும் காற்றாகிக் கரைந்திடும்
மாலின் மருகன் வள்ளியின் மணவாளன்
வானவர் துயர் தீர்த்த வடிவேலழகன்
வேலினைக் கையிலேந்தி வெற்றித் திருமகனாய்
தேரிலே வருகின்றான் சந்நிதி வீதியிலே.

3. வள்ளிக்கொடி தழைத்து வளர, சந்நிதியான்
வாசலிலே கொடியேற்றக் கொண்டாட்டம்
புள்ளிமான் ஈன்றெடுத்த வள்ளியின் மணாளனுக்கு
பதினைந்து நாட்கள் மகோற்சவப் பெருவிழா
துள்ளித் துள்ளி யாடுகின்ற மயிலிறகுக் காவடியும்
தூக்குக் காவடியும் சந்நிதியல் ஆடிவர
பள்ளிகொள்ளும் மாயவனின் மருகன் திருமுருகன்
தேரில் வருகின்றான் சந்நிதி வீதியிலே.

4. வீரவாகு தேவரின் வெற்றிப் பாதச் சுவடுகள்
வேலவரின் சந்நிதியில் சரித்திரச் சான்றாக,
வாரண முகத்தவனாய் வந்த தாரகாசுரனை
கூராயுதத்தினால் கொன்றொழித்தவன்
மாமரமாய் நின்ற கொடும் சூரபன்மனை
கூர் வடிவேலால் பிழந்து வென்றவன்!
பாரம் உனதேயென்று சரணடைந்த எமைக்காக்கத்
தேரில் வருகின்றான் செல்வச் சந்நிதி வீதியிலே.

- ஏழாலை மு. இந்திராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2012ம் ஆண்டு எங்கள் சந்நிதி முருகன் தந்த வரம்!**

# மீண்டும் நடக்கவைத்த எங்கள் குலதெய்வம்!

**- திருமதி துரைரெத்னவதி இரவீந்திரன்,** நடுத்தெரு, தொண்டைமானாறு -

செல்வச் சந்நிதி முருகன் எழுந்தருளியிருக்கும் தொண்டைமானாறுதான் நான் பிறந்த ஊர். தொன்றுதொட்டு எங்கள் குடும்பத்தினர் அனைவரும் முருகன்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர்கள். ஆவணி மாதத்தில் முருகனின் வருடாந்த பெருந்திருவிழாவின் போது எங்கள் ஊரே விழாக்கோலம் கொள்ளும். எல்லோருடைய மனங்களும் சந்நிதி முருகன்மீதே இருக்கும். இந்தப் பதினைந்து நாட்களில் ஊரில், வீடுகளில் வேறு எதுவித கொண்டாட்டங்களும் நடப்பதில்லை.

திருவிழாக் காலங்களில் கோயிலுக்கு வந்துசேரும் ஜனக்கூட்டமும், காவடிகளின் தொகையுமே சந்நிதி முருகனின் அற்புதங்களைப் பறை சாற்றும். எனது தந்தையார் ஒவ்வொரு வருடத் திருவிழாவிற்கும் பச்சைத் தென்னையோலைகள் வெட்டி, தன் கையாலே அதிலிருக்கும் ஈர்க்கு களை சுத்தம் செய்து 15 விளக்குமாறுகள் கட்டி கோவிலுக்குக் கொடுப்பார். மேலும் காலையும் மாலையும் திருவிழாவிற்குச் சென்று சாமரை வீசுவார்.

நாங்களும் முருகனுக்கு மாலை கட்டிக்கொடுப்பதற்காக எங்கள் வீட்டிலேயே பூந்தோட்டம் பராமரித்து மாலைகள் தொடுத்து, உறவுகள், சுற்றமென கூட்டம் கூட்டமாக முருகனிடம் செல்வோம். எங்கள் வீட்டிலிருந்து கோயில் அரைக் கிலோமீற்றர் தூரம் இருக்கும். நாம் முருகனுக்குரிய எந்த விரதமும் தவறவிடுவதில்லை.

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டு, அங்கேயே தொழில் புரிபவரான ரவீந்திரன் என்பவரைத் திருமணம் புரிந்த காரணத்தினால், கொழும்பிலேயே வாழவேண்டிய சூழ்நிலை அமைந்துவிட்டது. எனினும் திருவிழாக் காலங்களில் இங்குவரத் தவறுவதில்லை. முருகன்மீது அளவுகடந்த அன்பிற்குள் உள்வாங்கப்பட்டதனால், கொழும்பிலுள்ள எங்கள் வீட்டிலும் முருகன் ஆசனமும், அஸ்திரதேவி சூலமும் பிரதிஷ்டை செய்து, ஒரு கோயில் போன்றே வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவை ஒரு சாமியம்மாவினால் எங்களுக்கு வழங்கப்பட்டன. விசேட தினங்களில் பல அன்பர்களும் வந்து பஜனை நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

முருகன் அளிதத அற்புதங்களையும், அனுகூலங்களையும் எழுதப் போனால் இந்த இதழில் இடம்காணாது என்பதனால் மிக அண்மையில் முருகன் அருள் கிட்டிய சம்பவத்தை மட்டும் கூறுகின்றேன்.

கிட்டத்தட்ட 10 வருடங்களாக முழங்காலில் ஏற்பட்ட மூட்டுவலியால் கஷ்டப்பட்டவள் நான். கொழும்பிலும் வெளியிடங்களிலும் வைத்திய நிபுணர்களிடம் வைத்தியம் செய்தும் எதுவித பலனும் கிட்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவர நோய்உபாதை கூடிக்கொண்டே போய் காலை ஓரடி கூட எடுத்து வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு மருந்துகள் செய்தும் சரிவரவில்லை. இனிமேல் என் வாழ்க்கை சக்கர நாற்காலிதான் என்று நினைத்து விட்டேன்.

இந்த நிலையில் சத்திரசிகிச்சை செய்தே ஆக வேண்டும் என்று வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள். இந்தியாவிற்குச் சென்று சத்திர சிகிச்சை செய்யும்படியும் சிலர் ஆலோசனை கூறியபோது, உதவிக்கு யாருமின்றி கணவனும் நானும் தனித்து வாழ்கையில், என்ன செய்வேன். முருகா! உன்பணி செய்யக்கூட முடியவில்லையே! என் கால் நோயைத் தீர்க்கமாட்டாயா? என்று சந்நிதி முருகனை நினைந்துருகி வேண்டிய போது, மட்டக்களப்பிலுள்ள எனது சகோதரி போனில் கூறினார், "சந்நிதியில் ஊனமுற்று தங்கியிருந்த ஒருவர் முருகனருளால் நடப்பதாகவும், 2011 அற்புதங்கள் புத்தகம் தனக்கு கிடைத்திருப்பதாகவும், சிவகுமார் ஐயாவிடம் தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை வழங்கினார்."

நான் டெலிபோனில் சிவகுமார் ஐயாவிடம் கதைக்கும்போது, அவர் கேட்டார் "இப்பொழுது ஒரு பலகைமீது காலைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தபடியே, வலிவேதனை தாங்கமுடியாத நிலையிலிருந்துதான் என்னுடன் கதைக்கிறீர்களா" என்று கேட்டார். ஆச்சரியத்துடன் ஓமென்று சொன்னேன். மீண்டும் அவர் சொன்னார், "வருடக்கணக்காக பெருந் தொகையான குளிசைகள், மருந்துகளைப் பாவித்தும் எந்தவொரு முன்னேற்றமும் காணாமல்தானே இருக்கிறீர்களா? சந்நிதி முருகனின் மூலஸ்தான விளக்கின் எண்ணையைப் பெற்று, அதை மட்டும் தடவிக் கொள்ளுங்கள், நான் வந்து முருகனை அழைத்துப் பார்வையிடுகின்றேன். முருகனிடமிருந்து பூரணசுகம் பெற்றுத் தந்தால், 2012 புத்தகத்தில் போட, முருகன் தந்த அற்புதத்தை எழுதித் தருவீர்களா?" என்று கேட்டார். "நிச்சயமாக, இதனுடன் புத்தக வெளியீட்டிற்கான பங்களிப்பும் செய்வேன்" என்று உறுதியளித்தேன்.

இந்தவருடம் (2012) சிவராத்திரி தினத்திலிருந்து மூன்று தினங்கள் முருகனின் திருநீறு போட்டு என்னைப் பார்வையிட்டதுடன், எமது பூசை யறையில் சில ஒழுங்கமைப்புக்களை அவர் செய்துதந்தார், கந்தஷஷ்டி கவசத்தையும் தினமும் படித்துவந்தேன். இதிலிருந்து வலிவேதனை, வீக்கமெல்லாம் குறைவடையத் தொடங்கி, இப்போது முன்புபோலவே நடக்கின்றேன். முன்னைய காலங்கள் போலவே, இந்தவருடத் திருவிழா விலும் தொண்டைமானாற்றிலுள்ள எனது வீட்டிலிருந்தே நடந்துவந்து கந்தனைத் தரிசிப்பதாகவும், முருகனுக்கு வெள்ளியினால் வேல் வழங்கு வதாகவும் வேண்டுதல் செய்திருக்கின்றேன். சந்நிதி முருகனை முற்று முழுதாக நம்பியதால், என் நோய் குணமடைந்ததை நினைத்து உருகு கின்றேன்.

**- திருமதி ரெத்னா ரவீந்திரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## இஃது சந்நிதிப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தல்களிலொன்று

முன்சொல்லப்பட்ட "மீண்டும் நடக்கவைத்த எங்கள் குலதெய்வம்" என்ற ஆக்கத்தை பெற முயற்சித்தபோது, தடையேற்பட்டது. இதன்பின் முருகனவன் திருவிளையாடல் புரிந்து அவ்வாக்கம் கிடைக்கச்செய்ததைக் காணலாம்.

இதைக் கூறுவதனால், முருகனின் வரத்தைப் பெற்றுக்கொண்ட அம்மாவிற்கு மனஉளைச்சலை ஏற்படுத்துவது நோக்கமல்ல. எங்கள் சைவசமயத்தின் அருட்பிரவாகம் எவ்வளவு மகிமைவாய்ந்தது. முருகன் வழங்கிய வரத்தின் சக்தி எவ்வளவு என்பதை உலகறியச் செய்வதும், இதனால் பக்தி நெருக்கத்தில் அன்பர்களை உள்வாங்குவதுமே நோக்கம். இறை சங்கல்பங்களுக்கு உறுதியளித்தால், அதை நிறைவேற்றவேண்டும் என்பது இறைசட்டம். பலர் நேர்த்தி கட்டுவார்கள். இதில் சிலர் நேர்த்தி நிறைவேறியபின் விட்டுவிடுவார்கள். இதனால் ஏற்படும் குறைபாடு நீண்ட காலத்திற்குப் பிரதிபலிக்கும் என்பது அனுபவபூர்வமான உண்மை.

2012 புத்தக தொகுப்புக்கான ஆயத்தப்பணிகளின் முன்முயற்சியாக, அந்த அம்மாவிடம் போனில் தொடர்புகொண்டபோது, "நான் புத்தகத் திற்கான பங்களிப்புச் செய்கிறேன். ஆனால் ஆக்கம் எழுதித்தர விரும்ப வில்லை. முழுச்சுகமடையாமல் என்னவென்று எழுதித்தருவது... அடுத்த வருடம் பார்ப்பம்..." என்றார்.

"தனக்கு நல்லசுகம், நல்லபடியாக நடக்கிறேன்" என்று அடிக்கடி தகவல் தந்துகொண்டிருந்த அந்த அம்மா இப்படிச் சொல்கிறாவே என்று நினைத்துவிட்டு, இவ்விடயத்தை விட்டுவிட்டேன். ஒருவாரம் கழித்து, போனில் "ஐயா! நான் எழுதித்தருகிறேன். கொழும்பு வீட்டில் நான் விழுந்துவிட்டேன். கை அடிபட்டுப்போச்சுது. என்னால் ஒன்றும் செய்ய முடியாத படியால், தொண்டைமானாற்றுக்கு வந்து எனது தங்கையுடன் தங்கிநிற்கிறேன்." என்றார்.

"கையில் வெளிக்காயம் ஒன்றும் இல்லையே. இடதுகை மணிக் கட்டடி எலும்பில் சிறுவெடிப்பு ஏற்பட்டதாக முருகன் காட்டுகிறார். அது சிறுசம்பவம். நீங்கள் எழுதித் தாருங்கள். விரைவில் முருகன் சுகபடுத் துவார்" என்றேன்.

ஓமோம் அவ்விடத்தில்தான் நோ. காரணமொன்றுமில்லாமல் தான் விழுந்தனான். உடனே பிறசர் சோதித்தபோதும் பிறசர் இல்லையென் றார்கள். முருகனின் விளையாட்டென்பதை உள்ளூர உணர்ந்துகொண்டா.

முருகன் தன் ஊருக்கே அழைத்து, அவ்வாக்கத்தைப் பெற்றுத் தந்ததுமல்லாமல், அட்டைப்படத்தில் பிரசுரிக்கக்கூடிய, மற்றும் சந்நிதி பற்றிய முழுமையான நிகழ்வுப் படங்களையும் அவர்களின் கணனியிலி ருந்து சுலபமாகப் பெறக்கூடியதாகவுமிருந்தது. **- சி. சிவகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011ம் ஆண்டு சந்நிதியான் தந்த பேறு

# கண்ணுக்கு ஒளிதந்த கந்தனவன்!

**செ. உலகநாதபிள்ளை, வியாபாரிமூலை.**

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், அகில இலங்க சமாதான நீதவான்)

செல்வச் சந்நிதி முருகனே எனது குருவும், குலதெய்வமுமாகும். நான் சிறுபிள்ளையாக இருக்கும்பொழுது, ஐந்து வயதில் எனக்கு வலிப்பு போன்ற நோய் வந்ததால், முருகன் கோவிலில் எனக்கு காது குத்திய தாகவும், அங்கு என்னை விற்றுவாங்கியதாகவும் தந்தையார் கூறுவார். இதன்பின் நானும் எனது ஒன்றுவிட்ட சகோதரனும் ஊரிலிருந்து சந்நிதி வரையும் காவடி எடுத்துள்ளோம். எனது தந்தை ஒரு வியாபாரி. மேற் படிப்பை நான் விரும்பினாலும், என்னை வியாபாரத்தைப் பார்க்கும்படி தந்தையார் வற்புறுத்தி வந்தார். ஆயினும் முருகனருளால் எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்து அதில் சேர்ந்தேன்.

கடந்த பதினைந்து வருடங்களாக நீரிழிவு என்னும் நோய் பீடித்துள்ளது. கண்புரை (Catract) நோய் 2009ம் ஆண்டிலிருந்து ஆரம் பித்துள்ளதாக கண்வைத்திய நிபுணர் அறிவித்திருந்தார். வருடம்தோறும் கண்வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறுதல் என்பதை வழக்க மாக்கிக் கொண்டிருக்கிறேன். 2011ம் ஆண்டின் ஆரம்பத்தில் கண் வைத்திய நிபுணரைச் சந்தித்தேன். பரீட்சித்துவிட்டு உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்வேண்டுமென்றும், கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் பதிவு செய்யுமாறும் அறிவுறுத்தினார்.

நான் செவ்வாய், வெள்ளி, மற்றும் மாதாந்த கார்த்திகை திரு வுலாவில் கலந்து சந்நிதி முருகனைத் தரிசிப்பதால், சத்திரசிகிச்சை மேற்கொண்டால், இரண்டு மூன்று மாதத்துக்கு அப்பனைத் தரிசிக்க முடியாமல் போய்விடுமே எனக் கலங்கினேன். தரிசனம் செய்யும் நாட்களில் "முருகா! நீயே பெரிய டாக்டர், எனக்கு உதவமாட்டாயா" என்று விண்ணப் பித்து, கண்ணில் வீபூதி, தீர்த்தம் பூசி முறைப்பாடு செய்துவந்தேன். மூன்று மாதத்திற்குப் பின் (2011 புரட்டாதி மாதம்) கண் வைத்தியநிபுணரிடம் காண்பித்தேன். ஒரு மருந்தைத் தந்து, இதைப் பாவித்தால் போதும், பெரிதாக ஒரு குறைபாடுமில்லை என்றார். சந்நிதி முருகனின் அருளினால் தான் இது நடந்ததென எனக்கு நன்றாகத் தெரியும். சந்நிதியானே! என் செல்வத்தின் செல்வமே வாழ்க! என் செல்வத்தின் கடாட்சம் இப் புவிமேல் உள்ள எல்லோர்க்கும் பாலிப்பதாக.

2009ம் ஆண்டு ஆனிமாதம் பருத்தித்துறை சிவன்கோவிலடியில் நான் மோட்டார்சைக்கிளில் சென்றபோது, இராணுவ டிராக்டருடன் வாகன விபத்தில் சிக்கியபோது மயிரிழையில் உயிர் பிளைத்துக் கொண்டேன். சென்றவருட புத்தகம் கிடைத்தபின் தம்பி சிவகுமாரைச் சந்தித்தபோது, அவர் இச்சம்பவத்தைச் சொல்லியதுடன், அவ்விடத்தில் முருகனே உங் களைக் காப்பாற்றியிருக்கிறார் என்றுமுரைத்தார். அவன் அருளிய கிருபையை வியந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழங்கிய அருள்வாக்கை நிறைவேற்றிய சந்நிதியான்

2010ம் ஆண்டு, எமது இரண்டாவது வெளியீடான புத்தகத்தின், 5ம் பக்கத்தில் கிணற்றுக்கருகில் கவணிப்பாரற்றுக் கிடக்கும் தண்ணீர்த்தொட்டியில் அடியவர்க ளெல்லோரும் கால் கழுவக்கூடியதாக தண்ணீர்ப் பைப் பொறுத்தித் தரும்படி முருகன் ஒரு கோரிக்கையை வைத்தார் என்று அடியேன் சொன்னவுடனேயே, இக்கோரிக்கையை உடனே செயற்படுத்தினார் அந்தநேர பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் அவர்கள். இதன் பிரதிபலனாக "வெற்றிருக்கும் மகிழ்ச்சிக்கும் அறிகுறியான இரண்டு மாலைகளை ஒவ்வொன்றாக இரண்டு தடவைகள் வழங்குவேன்" என்று முருகன் சொன்னதாகவும், இதில் ஒரு மாலையை மறுநாளே வழங்கிவிட்டார் என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். அடுத்த இரண்டாவது மாலையை "உள்ளூராட்சி அமைச்சு செயலாளர்" என்ற பதவியுயர்வு மாலையாக இவ்வருடம் முருகன் வழிங்கிவிட்டார்.

இப்பண்பாளன், இவ்வெளியீட்டிற்குத் தொடர்ந்து பற்பல வழிகளிலும் பேருதவிகள் புரிந்துவருகின்றார். முக்கியமாக தனது வாகனத்தில் முழுப் புத்தகங் களையும் கோயில் வாசல்வரைக்கும் கொண்டுவந்து தந்து, வெளியீடும் செய்து வைத்துள்ளார். - ***சி. சிவகுமாரன்***

## சந்நிதி முருகன் அருளால் எனக்கு கிடைத்த அனுக்கிரகங்கள்

**இ. வரதீஸ்வரன்,** செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு.

இலங்கை நிர்வாக சேவைக்குரிய விசேட தரத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் முற்கூட்டியே எனக்குக் கிடைத்திருந்தது. எனினும் நான் கொழும்பு புறப்படவிருந்த இருநாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம் நான் ஏற்கனவே சமர்ப்பித்திருந்த ஆவணங்களில் 2010ம் ஆண்டுக்கான செயலாற்றுகை மதிப்பீடு இருக்கவில்லை எனவும் நேர்முகப்பரீட்சையின் போது அதனை நேரடியாக சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டேன். இதனை எடுப்பதற்காக யாழ் மாவட்ட செயலகம் சென்றபோது, அப்படிவம் உரியமுறையில் மேலதிக அரசாங்க அதிபர், மற்றும் அரசாங்க அதிபருடைய ஒப்பம் பெறப்பட்டிருக்கவில்லை என்பது தெரியவந்தது.

அக்காலப்பகுதியில் மேலதிக அரசாங்க அதிபராக இருந்த திரு. ஆ.சிவசுவாமி அவர்கள் தற்போது வடமாகாண பிரதம செயலாளராகவும் அரசாங்க அதிபராக இருந்த திரு. க.கணேஷ் அவர்கள் ஓய்வுபெற்றும் இருந்தனர். நேர்முகப் பரீட்சைக்கு இரு நாட்களே இருக்கின்றன. எவ்வாறு நான் இருவரையும் சந்தித்து மதிப்பீட்டைப் பெறப்போகிறேன் என்ற குழப் பத்தில் இருந்தேன். என்னுடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களை இதுதொடர்பில் நான் விசாரித்தேன். அவர்களுக்கும் இதே பிரச்சனை இருந்து, முற்கூட்டியே தெரிந்திருந்ததனால் முன்னதாகவே இருவரையும் சந்தித்து மதிப்பீடு பெற்றதாக கூறினார்கள். எனக்கு கால அவகாசம் இல்லை. இருந்தும் சந்நிதி முருகனை "நீதான் எனக்கு துணைபுரிய வேண்டும்" என வேண்டியபடி அவர்களுடன் தொலைபேசயில் தொடர்பு கொண்டேன்.

திரு. கணேஷ் அவர்கள் கொழும்பில் இருந்தார். அவர் தன்னை வீட்டில் சந்திக்கலாமென விலாசம் தந்தார். திரு. ஆ.சிவசுவாமி அவர்க ளுடன் தொடர்புகொண்டபோது பிரதம செயலாளர்கள் மாநாட்டுக்காக மலையகம் சென்றுவிட்டதாக தெரியவந்தது. "முருகா நீதான் எனக்கு வழியைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு" எனத் திரும்பத் திரும்ப நினைத்து அவருடன் தொடர்பு கொண்டேன். நான் விடயத்தை அவரிடம் கூறி நாளை மறுநாள் கொழும்பில் நடக்கவிருக்கும் நேர்முகத் தேர்வுக்காக நாளை நான் கொழும்பு செல்வதாகக் கூறினேன். அதற்கு அவர், "நாளை மதியத்துடன் மாநாடு முடிவடைவதாகவும், என்னை குருநாகல் வழியாக கொழும்பு வருமாறும் இடைவழியில் தன்னை சந்திக்க வாய்ப்பு இருக்கும்" எனக் கூறினார். எனது நேர்முகப் பரீட்சைக்கான கோவைக் குள் "சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற இரு வெளியீடுகளை வைத்துச் சென்றேன். பிற்பகல் 2 மணியளவில் கைத்தொலை பேசியில் திரு. ஆ.சிவசுவாமி அவர்களுடன் தொடர்புகொண்டேன். தான் மாநாடு முடிந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் வழியில் சந்திக்கலாம் எனவும் நம்பிக்கையூட்டினார். போகும்வழியில் அடிக்கடி தொடர்பு கொண்டபடி சென்றேன். பி.ப 5.30 மணிக்கு பொல்காவலையில் அவரை சந்தித்து ஒப்பம் பெற்றதுடன் நிறைவான ஆசியும் பெற்றுக்கொண்டேன். சந்நிதி யானுக்கு நன்றிகூறி நம்பிக்கையுடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்டேன்.

திரு. க.கணேஷ் அவர்களுடன் தொடர்புகொண்ட போது மறுநாள் காலை 7 மணிபோல் தன்னை சந்திக்கலாம் எனக் கூறினார். சந்நிதியானை மீண்டும் நினைந்து நேர்முகப் பரீட்சைக்கான சகல ஆயத்தங்களுடனும் அவரிடம் சென்றேன். அவர் கூறியபடி காலை 7 மணிக்கு எனக்காக காத்திருந்தார். அவரிடம் ஒப்பம்பெற்று, நிறைவான ஆசிகளை அவரிடமும், அவர்தம் பாரியாரி டமும் பெற்றுக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் நேர்முகப் பரீட்சைக்காக அமைச்சு அலுவலகத்திற்கு சென்றேன். எனது கோவைக்குள் "சந்நிதியான் அற்புதங்கள்" நூல் இருந்து புதுத் தெண்பினை அளித்தது. எனக்கு முன்னர் நேர்முகப்பரீட்சை முடிந்த சிலர் மண்டபத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந் தனர். அப்பொழுது ஓர் ஆச்சரியம்! முன்னாள் அரசாங்க அதிபர் திரு. நீக்கி லாப்பிள்ளை அவர்கள் என்னைச் சந்தித்து எனக்கு வாழ்த்துக்களையும் தனது நல்லாசிகளையும் தெரிவித்தார். நான் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர், முன்னாள் அரசாங்க அதிபர் திரு. வே. விஸ்வலிங்கம் அவர்களும் தொலைபேசி மூலம் தனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து நம்பிக்கையூட்டியிருந்தார். மொத்தத்தில் நான் நேசித்த அனைத்துப் பெரியவர் களினதும் ஆசிகள் இவ்வேளையில் ஒன்றுபடக் கிடைத்தது "அவன் செயல்" தான் எனில் அது மிகையல்ல. நேர்முகப் பரீட்சையையும் இலகுவாக எதிர்கொண் டேன். நான் சமர்ப்பிக்க வேண்டிய மதிப்பீட்டு ஆவணத்தையே அவர்கள் முதலில் கேட்டு திருப்தியுடன் ஏற்றுக்கொண்டனர். பெரும் நம்பிக்கையுடன் திரும்பினேன். எனக்கு நல்ல முடிவு கிடைத்தது. நான் தேர்ச்சிபெற்றுவிட்டேன்.

இவை எல்லாவற்றிற்கும் எனது சக்திக்கு அப்பாற்பட்ட சந்நிதி முருகப் பெருமானுடைய அனுக்கிரகங்களேயென பூரணமாக நம்புகிறேன். இன்றும்கூட எனது பயணங்களின்போது பெருமானின் நூல்களை எடுத்துச செல்ல மறப்ப தில்லை.

**இ.வரதீஸ்வரன்**
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உத்தமனார் விரும்புவது உள்ளக்கமலம்

R.சுகுமாரன் என்ற பொலிஸ் அதிகாரியினுடைய சுவாசப்பைகளிரண்டையும் முருகப் பெருமான் அடியேனுக்கு காட்டி, அவர் இதயம் எவ்வளவு தூய்மையாக இருக்குதென்பதை உணர்த்தி விட்டு, தனது அனுக்கிரகங்கள் பற்றியும், இவரது ஆத்மீக சாதனைகள் பற்றியும் அறியும்படி சந்நிதிப் பெருமான் கட்டளையிட்டதற்கிணங்க, 23-06-2012 அன்று இவரது மனை நாடிச்சென்று அறிந்துகொண்ட ஆத்மீக அனுபவங்களைக் காணலாம். - *இப்புத்தக ஆசிரியர் சி.சிவகுமாரன்*

செல்வச் சந்நிதி முருகனின் திருவருளுக்கு ஆட்பட்ட தொடர்பும், என்னை முருகன் வழிநடத்துவதையும் பரிபூரணமாக உணர்ந்ததனால் பின்வரும் நிகழ்வுகளைத் தருகின்றேன்.

எனது திருமண நிகழ்வும் சந்நிதியில்தான் நடைபெற்றது. மனைச்சிறப்பு, மக்கள் சிறப்பு, தொழில் சிறப்பு அத்தனையும் முருகப் பெருமான் நிறைவாகத் தந்து கொண்டிருக்கின்றார்.

இந்திய இராணுவத்தினர் இலங்கையின் வடபுலத்தில் பணிபுரிந்த காலப்பகுதியில், தொண்டைமானாற்றில் பயிற்சிபெற்ற இலங்கை வடகிழக்கு தமிழ்ப் பொலிசாருக்கு இலங்கைப் பொலிஸ் தொடர்பான சட்ட நெறிமுறைகளைப் படிப்பித்து, பயிற்சி கொடுப்பதற்காக O.I.C.யாக நியமிக்கப்பட்டிருந்தேன். தொண்டைமானாற்றுச் சூழலில் கடமையாற்றிய காலவேளையில், சந்நிதி முருகனின் அருட்பார்வை கிடைத்திருப்பதை பல தடவைகள் உணர்ந்து கொண்டேன். பொலிஸ் தொழில் ரீதியாக சில அற்புதங்களை வெளிப்படையாக சொல்லமுடியாவிட்டாலும், அன்றைய யுத்த சூழ்நிலையில் ஏற்படவிருந்த பெரும் நெருக்கடிகளெல்லாம் முருகன் அருளால் நிவர்த்தியானதை நான் இன்றும் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்ப்பதுண்டு. அங்கு ஒருநாள் நான் நித்திரையிலிருந்த போது எனது காலில் ஏதோ கடித்துவிட்டது. அப்பொழுது நான் பயந்தவேளை ஒரு கனவு கண்டேன். "உனக்கு எதுவித தீங்குமில்லை. நீ வழங்கிய பயிற்சி நிறைவுறுகிற காலம் நெருங்கிவிட்டது. நீ உன் குடும்பத்தாருடன் சந்தோஷமாக வாழ்வாயாக" என்று சந்நிதி முருகன் மயில்மீது காட்சிகொண்டு உரைத்ததைப் பெரும் பேறாகவே அடைந்துவிட்டேன்.

முருகன் வழங்கிய கொடையாகவே இன்றும் யாழ்ப்பாணத்தில் கடமைபுரிந்து எனது குடும்பத்தாருடன் சந்தோஷமாக வாழ்கின்றேன்.

இலங்கை வடகிழக்கு பொதுமக்கள் பிரஜாகுழு பொலிசாருக்கு பொலிஸ் சட்டதிட்டங்களை திறமையாகப் படிப்பித்ததைக் கண்ட இந்திய இராணுவ பொலிசார், 1988ம் ஆண்டு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பாராட்டுதல் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வருடம் (2011) சந்நிதிகோயிலில் பல தடவைகள் கந்தன் பெருமைபற்றி மனநிறைவுடன் உரையாற்றினேன். தேரிலன்றும் மக்களுக்கு என்னைப் பொலிசென்று காட்டிக்கொள்ள விரும்பாது தேர் முட்டிக்கு அருகிலிருக்கும் ஒலிபெருக்கி அறையில் நின்று சமய சட்ட திட்டங்கள், ஆத்மீகம் பற்றி உரையாற்றிவிட்டு வெளியே வந்தபோது, ஒரு பெண் தனது சங்கிலியைக் காணவில்லையென்று சத்தமிட்டு, அழுது, புலம்பி ஓலமிட்டார். நான் மனம் பொறுக்கமுடியாமல் பகிரங்கமாக நின்று கொண்டு ஒலிவாங்கியில் கடுந்தொணியிலும் நகைச்சுவையாகவும் ஆற்றிய உரைகளையும், ஆத்மீகம் சார்ந்த உரைகளையும் எனக்குத் தெரியாமல் இன்ரநெற்றில் நேரடியஞ்சல் செய்துவிட்டார்கள். வெளிநாடுகளில் பெருந் தொகையான மக்கள் இதை கண்ணுற்றதாக அறிந்துகொண்டேன்.

நான் என்ற ஆணவம் என்னிடம் இல்லை. "மெய்"யென்று நக்க லாகச் சொல்லப்படும் இந்த உடம்பு பொய்யானது. சிவமாகிய ஆத்மா பரமாத்மாவிடம் சேரவேண்டுமென்றால், உளத்தூய்மையுடன் ஆத்மீகமாக வாழவேண்டும். சிவமாகிய நாங்கள், சானாவுக்கு மேல் விசிறி (ி) இருக்கும் வரைக்கும்தான் **சிவம்.** உயிரான விசிறி (ி) போனால் நாங்கள் **சவம்.** ஒரு பொலிஸ்காரன் இப்படியெல்லாம் ஆத்மீகம் சார்ந்த நீண்ட கதைகளையெல்லாம் யூணிபோமுடன் நின்றுகொண்டு பேசுகிறாரே என்று சந்தோஷப்பட்டு திரும்பத் திரும்ப இன்ரநெற்றில் பார்த்ததாக கனடா விலிருந்து வந்த சித்தங்கேணியைச் சேர்ந்த சிவகுமார் என்ற அன்பர் என்னிடம் தெரிவித்துவிட்டு, "ஏன் ஆலயத்தில் யூணிபோமுடன் நின்று கொண்டு உரையாற்றினீர்கள்" என்று வினவினார்.

முருகன் மீதுள்ள அளவுகடந்த அன்பு காரணமாக பக்தி மயக்கத்தில் நான் யூணிபோமுடன் நின்றது என் கருத்தில் துளியளவும் இருக்கவில்லை. "நான் யூணிபோமுடன் நின்று பேசவில்லை" என்று வாதாடியபோது, அதென்ன! என்று கேட்டார். இன்றைக்கு எத்தனைபேர் தங்கள் பெயருக்கு முன்னால் "சுவாமி" என்ற அடைமொழியையும் சேர்த்துக்கொண்டு காவியுடை தரித்துக்கொண்டு உலாவருகின்றார்கள். முன்னைய காலத்தில் காவியுடை தரிப்பவருக்கு சரியான ஒரு தகுதியும், நற்குணாம்சங்களும் இருந்தன. இன்று சமயம் உள்ளிட்ட எல்லாவற்றிலுமே போலி ஊடுருவி விட்டது. இந்தியாவில் ஒருபக்கம் என்ன நடக்கிற தென்பதை தொலைக்காட்சியிலும், நெற்றிலும், பத்திரிகைகளிலும் தினம் தினம் வெளியாகிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

நான் இதயத் தூய்மையுடன், முருகப் பெருமானது வழிப்படுத்த லுடன் கூடிய நெறியான வாழ்க்கை வாழ்வதற்கு வித்திட்டவர் எனது தந்தையார். இவர் பெயர் ஆறுமுகம் இராசையா. சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட தந்தையார் இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக் டராவார். இவர் ஒரு முருகபக்தராகவும், மாமிசம் எதுவும் சாப்பிடாதவ ராகவும், ஆலயங்களில் இடம்பெறும் தீக்குளிப்புகளில் விருப்புடன் பங்குபற்றுபவராகவும் இருந்தார். பொலிஸ் சேவையிலிருந்து இளைப்பாறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தாடிவளர்த்து, உருத்திராக்கமணிந்து, சித்துக்கள் கைவரப் பெற்ற வராகத் திகழ்ந்தார்.

1959ம் ஆண்டு கொழும்பு கொம்பனித்தெரு, பொலிஸ் குவாட்டஸ் (E Block) அங்கு ஒரு சிறு அறை. தந்தையாரினால் சுவாமியறையாகப் பாவிக்கப்பட்டது. சுவாமியறையென்று சொல்வதை விட கோவிலென்றே சொல்லலாம். அப்போது எனக்கு 07 வயதிருக்கும். இந்த அறையில் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். அப்போது தந்தையாரின் வற்புறுத்தலின் பேரில் கூட்டுப்பிரார்த்தனைய்யில் பங்குபற்றுவேன். கொம்பனித்தெரு சிவன் கோவிலில் வெள்ளிதோறும் இடம்பெறும் கூட்டுப்பிரார்த்தனையிலும் தவறாது என்னை அழைத்துச் சென்று பஜனை பாடப் பழக்குவார்.

அக்கால வேளையில் சனா என்ற வெள்ளைக்கார சாமியார் ஒவ்வொரு வருடமும் தவறாது வந்து பஜனை நிகழ்வில் கலந்துகொள்வார். 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் அந்த வெள்ளைக்கார சாமியார் குதிரையில் பயணிக்கும்போது விழுந்ததனால், கால் அடிபட்டு துன்பப்பட்டார். எனது தந்தையாரை ஜேர்மணிக்கு அழைத்துக்கொண்டதன் பேரில் சித்திரை மாதம் அங்கே சென்றார். அங்கே ஒரு அற்புதம் நிகழ்ந்தது. வெள்ளைக் காரர் வீட்டில் தந்தையாரினால் பஜனை நிகழ்த்தப்பட்டது. பலர் பங்குபற்றிய பஜனையில் சனா மட்டும் நின்றபடியே பாடினார். பக்தி மயக்கத்தினிடையே தந்தையார் சனாவை இருந்து பாடும்படி கட்டளையிட, கால் மடக்கி இருக்கமுடியாதென அவர் அடம்பிடிக்க, தந்தையார் ஒரு கைப்பிடி விபூதி எடுத்து அவர்மீது வீச, உடனே சனா பூரண சுகமடைந்து இருந்து பாடினார்.

இதன்பின், வெள்ளைக்காரர்கள் ஒன்றுசேர்ந்து சைவசமயத்தின் மகிமைகளைப் போற்றி ஆங்கிலத்தில் புத்தகம் வெளியிட்டார்கள். "Gotz Nitzche" என்ற பெயரில் 03-10-1989 அன்று வெளியிடப்பட்டது.

நான் சாஜனாக வவுனியாவில் பணிபுரிந்தபோது, எனது காலில் ஏற்பட்ட காயத்தினால் சரியாக நடக்கமுடியாத நிலையிலும், மேலிடத்து உத்தரவுக்கமைய சிவனொளிபாத மலையில் சூரிய உதயம் காணும் பெருவிழாவுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு மிதமிஞ்சிய சன நெரிசலில், என்னால் நடக்க முடியாத நிலையில் எனது தொப்பி பள்ளத்தில் விழுந்த தனால், மிகத் துயரடைந்தபோது, திடீரென வெள்ளை ஆடையுடன் தோற் றமளித்த நபர் எனது தொப்பியையும் கிடைக்கச்செய்து, சிவனொளிபாத உச்சியையும் காட்டி, அதற்குரிய வழியையும் காட்டி, என்னால் தொடர்ந்து நடக்கக்கூடிய சக்தியையும் அருளிய அற்புதமானது, இது கனவா? நனவா? அல்லது நினைவா? எனக்கு நினைக்கும்போது இப்பவும் மயிர் கூசுகின்றது. நான் வானில் கண்ட இன்பம்! இவ்வையகத்தில் உள்ள மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இராசையா சுகுமாரன்**
யாழ். மாவட்டப் பிரதேச
பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவுப்
பொறுப்பதிகாரி

**Rasiah Sukumaran**
O. I. C.
P. P. R. Officer,
Jaffna Division.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோயைக் குணப்படுத்திய குமரக்கடவுள்

வல்வெட்டித்துறை, ஆலடி ஒழுங்கையில் வசிக்கும் திருமதி தி. மாணிக்க ரெத்தினம் என்ற தாயார், 19-06-2012 அன்று முருகனின் புத்தகத்திற்கென ஐயாயிரம் ரூபாவை ஓரன்பர் மூலமாக அனுப்பி வைத்தார். பணம் கிடைத்ததென்ற தகவலைத் தெரியப்படுத்துவதற்காகவும், அந்த தாயார்பற்றி முருகன் சில தகவல்களைச் சொன்னதன் காரணமாகவும் அந்த அம்மாவிடம் சென்றேன். "ஊழ்வினை கொடுவினை காரணமாக துன்பங்கள், குறைபாடுகள் மத்தியில் வாழ்ந்தாலும், முருகப் பெருமானின் அனுக்கிரகம், தரிசனக்காட்சி உங்களுக்கு கிடைத்ததனால், துன்பத்திலும் ஆறுதல் நிலை, அதனால்த்தான் உயிர் வாழ்கிறீர்கள்" என்றும், இது பற்றிய விரிவான தகவல்களையும் சொன்னேன். அந்தத் தாயார் கண்ணீர் மல்க அடியேனிடம் உரைத்த சம்பவங்களில் சிலவற்றைப் பின்பு எழுதித் தந்தார். **- சி. சிவகுமாரன்**

எனக்கு கவலை மேலிடும் போதெல்லாம் செல்வச் சந்நிதி முருக னுடைய மண்டபத்தில் போய் ஒரு மணிநேரம் படுத்திருந்தால் எனது எல் லாக் கவலைகளும் மறந்து போய்விடும்.

எனது சிறுநீரகத்தில் கற்கள் உண்டாவதனால் மூன்றுமுறை அறு வைச் சிகிச்சை செய்துள்ளேன். திரும்பவும் இரு சிறுநீரகத்தில் கற்கள் தோன்றிவிட்டன. எனது பிள்ளைகளில் இருவர் என்னுடன்தான் இருக்கின் றார்கள். இவர்கள் வாய்பேச முடியாதவர்கள். ஆண்பிள்ளைக்கு கண்பார் வைக் கோளாறும் இருக்கின்றது. எங்களால் எதுவித வேலையும் செய்யமுடி யாதவர்களாக இருக்கின்றோம்.

"சந்நிதி வேலவனின் அற்புதங்கள்" 1வது, 2வது வெளியீடுகள் கிடைத்து, அதன் ஆவலினால் விருப்புடனிருந்தும் சென்றவருட பொத் தகத்தை, எனது உடல்நிலை தளர்வாக இருந்தபடியால் சனநெருக்கடியில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது, "முருகா! எனது கால்கள் சோர்கின்றன. என்னால் ஏலாமல் இருக்கின்றது. பொத்தகம் கிடைக்கவில்லையே" என்ற கவலையுடன் நாங்கள் வந்த ஆட்டோவில் ஏறுவதற்காக சென்றுகொண் டிருந்தபோது, நிலத்திலே என் காலில் தட்டுப்பட்டு ஒரு பொத்தகம் கிடைத் தது. வீடு சென்று பொத்தகத்தைப் படித்தபோது கண்கள் கலங்கின. நாங்கள் எந்த நிலையிலிருந்தாலும் உடனடியாகவே என்னிடமிருந்த ஐயா யிரம் ரூபாவை பொத்தகத்திற்குள் முருகனை நேர்ந்து வைத்துவிட்டு, இதன்பின் இப்புத்தகத்தாரிடம் கொடுக்கும்படி அப்பணத்தை அப்பாத் துரை மாஸ்டரிடம் (வல்வையூர் அப்பாண்ணா) கையளித்தேன்.

இதன்பின் ஒரு வெள்ளிக்கிழமை சந்நிதிக்குச் சென்று கோயிலில் ஏலாமல் படுத்திருந்துவிட்டு, வீட்டுக்கு வந்தபின் மாலை 5 மணிபோல், வேட்டித்துண்டுடன் உடல் முழுவதும் விபூதியுடன் பூநூல் துலங்க முருகன் காட்சிதந்து அருளினார். நான் எனது உள்ளுணர்வு மூலம் திருமுருகன்தான் என்பதை உணர்ந்துகொண்டேன். இதன்பின் எனது சிறுநீரக நோயும் இல்லாது போய்விட்டது. திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை.

**- அடியாள் தி. மாணிக்கரெத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✯ சஞ்சலம் தீர்த்த சந்நிதி வேலன்!

**செல்வி சுதர்சினி சுத்தானந்தன், குப்பிளான் (பிரான்ஸ்)**

நான் கரம்பொன் மகாவித்தியாலயம், மண்கும்பான் அ.த.க. பாடசாலை, வேலணை கிழக்கு மகாவித்தியாலயம், இறுதியாக ஊரெழு கணேசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியையாகக் கடமை யாற்றினேன். வேலணை மகாவித்தியாலயத்தில் ஆசிரியப்பணி புரிந்தபோது, ஒவ்வாத குறுக்கீடு ஒன்று என்னைப் பின்தொடர்ந்தது. இதிலிருந்து விடுபடு வதற்காக ஊரெழு கணேசா வித்தியாலயத்திற்கு மாற்றமாகி வந்தேன். இதன்பின்பும் அக்குறுக்கீடுகள் மாந்திரீகம் முதலாகப் பலவழிகளிலும் என்னைச் சஞ்சலப்படுத்தியதனால், நான் ஆசிரியப் பணியையே கைவிட வேண்டியேற்பட்டது.

இதனால் அவசரமாக வெளிநாடு சென்றேன். அப்பயணமும் கென்ஜா என்னும் நாட்டில் தடைப்பட்டு அங்கேயே நின்றேன். ஓராண்டு காலம் சிறைப்பட்டதுபோன்ற தன்மையில் ஒரு அறைக்குள் முடங்கி சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன். பல தடவைகள் விமான நிலையத்திற்குப் போவதும் வருவதுமாக தடைப்பட்டு துன்பப்பட்டிருந்த காலப்பகுதியில், சந்நிதி வேலனின் அனுக்கிரகம் கிட்டியது.

குப்பிளான் தபாற்கந்தோரின் அஞ்சல் அதிபரான அம்மா, எனது தம்பி சுதனிடம் 2011 "சந்நிதி அற்புதங்கள்" என்ற நூலினை வழங்கி யிருந்தா. இந்நூலினைத் தம்பி வாசித்தபின், தம்பி எனக்கு ஏற்படுத்தி யிருந்த நம்பிக்கையின்பேரில் சிவகுமார் ஐயாவுடன் போனில் கதைத்தேன். அவர் என்னென்ன வழிகளில் எனக்கு தடைகள் ஏற்பட்டிருக்கென்பதை உரைத்து, இதற்குப் புரிகாரமாக ஓர் ஓலைப்பெட்டியில் அருச்சனை சாமான்களுடன் எனது போட்டோவையும் வைத்து சந்நிதி முருகனிடம் ஒப்படைத்து பூஜை செய்வித்துவிட்டுச் சொன்னார் "உனது தடையெல்லாம் முருகன் நீக்கிவிட்டார். இன்றிலிருந்து ஐந்தாம் நாள் உனது பயணம் வெற்றியாகும்" என்றார். உண்மையிலேயே ஐந்தாம் நாள் விமான நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அன்றைய தினம் எந்தவொரு தடங்கலுமில்லாமல் பிரான்சுக்கு வந்துவிட்டேன்.

இதன்பின் எனது திருமணத்தையும் நிறைவேற்றித் தரும்படி கேட்டிருந்தேன். "சேலையணிந்து ஐந்து வீடுகளுக்குச் சென்று சேலைத் தலைப்பில் மடிப்பிச்சையெடுத்து முருகன் பணிக்கு அனுப்பிவையுங்கள், முருகன் நிறைவேற்றித் தருவார்" என்றார்.

பட்டப்படிப்பு படித்து, அழகிருந்தும் நான் மூல நட்சத்திரத்தில் பிறந்தபடியால், நட்சத்திரத்தைச் சொல்லிப் பயம்காட்டி பல திருமணப் பேச்சுக்களும் தடங்கலாகிய போதும், பிரான்சில் எனக்குத் தெரிந்த தமிழ் வீடுகளுக்குச் சென்று மடிப்பிச்சை எடுத்தபின் சந்நிதி அற்புதங்கள் புத்தகம் அச்சிட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில் முருகன், குமணன் என்னும் பெயருடைய துணைவனைத் தந்துள்ளார். ஐப்பசி மாதம் திருமண நாள் நிச்சயம் செய்யப்பட்டிருக்குது. என்றும் மறவேன் சந்நிதி முருகனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுக்கிரகங்களில் இதுவும் ஒன்று

மல்லாகத்தைச் சேர்ந்த பிரசாந்தன் (சாந்தன்) என அழைக்கப்படும் நான் London இல் 11 வருடங்களாக வசித்து வருகின்றேன். எனக்கு 11/2 வருடங்களாக இப்புத்தகத்தின் தொகுப்பாளர் ஐயா சி.சிவகுமாரனினால் பல அற்புதங்களை முருகனிடமிருந்து பெற்றுத்தந்துள்ளார். சென்ற வருட சந்நிதிப் புத்தகத்திற்கும் லண்டன் சக்திவேலன் ஆலயமூடாக நிதிப்பங்க ளிப்புச் செய்தேன். இதன்பின் உடற்சுகம் முதலான பல பலன்களை அடைந்தேன். எனக்கு P.R கிடைக்கவேண்டிய காலம் கடந்தும் கிடைக்கா திருந்த P.R கிடைத்தது. இதன்பின் தினமும் ஐயாவுடன் தொலைபேசியில் கதைப்பது வழக்கமாகிவிட்டது.

நான் லண்டனில் ஒரு வீடு வாங்க முற்பட்டு, ஒரு லோஜரால் வங்கியில் பணமோசடி இடம்பெற்று, இதற்காக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வழக்கில் நீதி நிலைபெற வேண்டுமென்பதற்காக, சமீபத்தில் சிவகுமாரன் ஐயாவிடம் கேட்டபோது, "முருகன் சொல்கிறார், லண்டனில் ஒரு கோயில் கொடியேறப்போகிறது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு வேண்டுதல் செய், வெற்றிவரும்" என்றார். அப்பொழுது நான் கேட்டேன் எந்தக் கோயிலென்று கண்டுபிடிப்பது? அதற்கு அவர் சொன்னார் "அந்தக் கோயில் பாம்பு தொடர்பான ஆலயம், அங்கு நீர் ஒருதடவை மட்டும் சென்றுள்ளீர்" என்று. "எனக்கு எந்தக் கோயிலென்று விளங்க வில்லை. விசாரித்து விட்டுச் சொல்கிறேன்" என்றேன்.

நான் விசாரித்துப் பார்த்தபோது சொன்னார்கள், Edmonton, Enfield நாகபூசனி அம்மன் கோயிலென்று. 2005ம் ஆண்டு அந்த அம்மன் கோயிலுக்கு நான் ஒருதடவை சென்றது ஞாபகத்திற்கு வந்தது.

நான் நாகபூசனி கொடியேற்றத்திற்கு செல்வதற்காக வேலைக்கு Off கேட்டபோது, கட்டாயமாக வேலைசெய்யவேண்டும். Off தரமுடியா தென்றார்கள். நான் கவலைப்பட்டுக்கொண்டு ஐயாவிடம் கூறியபோது, "கவலைப்பட வேண்டாம், வேலைக்கு Off எடுக்க வேண்டாமென்றும், போகச்சொன்ன சந்நிதி முருகன், அம்மனின் கொடியேற்ற நிகழ்வில் கலந்துகொள்ள ஒழுங்கமைத்துத் தருவார்" என்றார். இதன்பின், நான் கேட்காமலேயே அவர்களாகவே Shift மாத்தி, நான் முழுமையாக கொடி யேற்ற நிகழ்வைப் பார்ப்பதற்கேற்ற மாதிரி எனக்கு வேலைநேரம் அமைத் துத் தந்தார்கள். அப்பொழுதுதான் நான் நினைவுகூர்ந்தேன், இவையெல் லாம் முருகனின், அம்மனின் செயலென்றும், நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்றும். நான் கொடியேற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோது, அம்பாளின் அழகுக்காட்சியில் என்னையிழந்தேன். நிறைந்த அமைதி கிடைத்துக் கொண்டது. என்னையறியாமலே அம்பாளைப் படமெடுத்து e-mail அனுப் பினேன். அம்பாளும் சந்நிதி முருகன் புத்தக அட்டைப்படத்தின் பின்பக் கத்தில் இடம்பிடித்ததையறிந்து மகிழ்ந்தேன்.

- ந. பிரசாந்தன்
Eastham, London.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்திவேல்

# சந்நிதியான் "அற்புதங்கள்" புத்கம் தந்த சக்திவேலன் இன்று வளர்ச்சிப்பாதையில் !

முருகன் படத்துடன் மட்டும் ஆரம்பமான சக்திவேலன் இன்று லண்டனில் வெற்றிநடை போடுகின்றான். இவ்வாலயம் மிகச்சிறிய இடத்தில் அமைந்திருந்தாலும் சக்திவேலனைத் தேடிவருகின்ற அன்பர்களுக்கு அவர் பெரிய அளவில் அருள்பாலிக்கின்றார் சக்திவேலன் ஆலயத்தில் இன, மத, மொழி இன்றி எல்லா உலக மக்களும் வந்து வழிபட்டு, நற்பலனடையும் ஓர் ஆலயமாக அமையப் பெற்றுவருவது சிறப்புக்குரியதாகும்.

தொடர்மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் அருள்பாலித்து வந்த சக்திவேலனுக்கு தற்போது தரையில் புதிதாக கோயில் அமையப் பெறுவதற்கு அடிகோலப்பட்டுள்ளது. 2012 புத்தகத்திற்கென ஒரு லட்சம் ரூபாவை அனுப்பிவைத்தவுடன் பல லட்சங்கள் உதவி கிடைத்துள்ளது. அப்புதிய இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு உதவிதந்தவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெயர் Mr. R. Belmouloud என்பதை பக்தர்களுக்கு அறியத்தருகின்றோம். **ஓம் சக்திவேல் ஓம்**

Old Address:
**Shakthivel Hindu Association,**
**38, Cranbrook Road,**
**Ilford, Essex,**
**I. G. 14 N F**

New Address:
**Shakthivel Hindu Association,**
**657, Green Lane,**
**Hornsey, London.**
**N & Oay**

**Tel : 02036408113**
**Web : www.shakthivel.co.uk**
**E-mail : omshakthivelan@gmail.com**

# அருளும், அற்புதமும் நிறைந்த சந்நிதிப் புத்தகம்

வியாபாரிமூலையைச் சேர்ந்த, பு.செந்தில்நாதன் ஆகிய எனக்கு, பருத்தித்துறை கிராம அலுவலர் திரு. சீ.லம்போதரன் அவர்கள் 2010 புத்தகம் ஒன்றை வழங்கியபின் என்வாழ்வில் அடைந்துகொண்ட முன்னேற்றங்கள் பற்றி 2011 புத்தகத்தில் எழுதியிருந்தேன். பின் இப்புத்தகத்தை நானே தேர்த்திருவிழாவிற்கு நேரில்வந்து பெற்றுக்கொண்டு, எங்கள் பணப்பெட்டியிலே வைத்துப் பூசித்து வருகின்றேன். சந்நிதி முருகன் அருளினால், கடந்த எட்டு வருடங்களாக விரும்பியிருந்த திருமணமும் நிறைவேறி, அழகன் பாலன் முருகன் போலவே எங்களுக்கு அழகான ஆண்குழந்தை ஒன்றும் கிடைத்துள்ளது. இத்துடன் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் வேலை செய்துகொண்டிருந்த எனது மனைவிக்குத் தற்போது அரசாங்க வேலையும் கிடைத்துள்ளது. எங்கள் இல்லற வாழ்வும் இனிமையாகச் சென்று கொண்டிருக்கின்றது. இவ்வருட புத்தகம் தட்டச்சு செய்து நிறைவுறும் நேரத்தில் தொடர்புகொண்டு மீண்டும் வேலவன் தந்த அனுக்கிரகங்களை இந்நூலில் எழுதும் பாக்கியத்தினைப் பெற்றேன்.

~ **புஸ்பநாதன் செந்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களும் அற்புதங்களும்

**T. Evangaline Yalinie. India. (London)**

நான் இந்தியாவில் பிறந்து வளர்ந்த பெண். இப்போது இரண்டு வருடமாக லண்டனில் வசிக்கிறேன். இந்த இரண்டு வருடத்திற்குள் 11/2 வருடத்தில் அதிக பிரச்சனைகளையும், துன்பங்களையும் எதிர்கொண்டேன். மிகுதி 6 மாதங்களாக நின்மதியாக உள்ளேன். நான் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவள். என் வாழ்க்கையில் இந்துக் கோயிலுக்கோ அல்லது இந்து சார்ந்த நிகழ்ச்சிகளுக்கோ சென்றதில்லை.

சக்திவேலன் ஆலயத்தைப் பரிபாலித்துப் பூசையாற்றுபவர் - அவர் என்னிடம் "எதைப்பற்றியும் யோசிக்காமல், நீ சக்திவேலனிடம் ஒருதடவை வந்துபார். உன் பிரச்சனைகளுக்கும், கவலைகளுக்கும் விடுதலை கிடைக்கும்" என்று உறுதிமொழி கூறினார். அவர் சொன்ன வார்த்தைக்காகச் சென்றேன். அந்த ஆலயத்தின் வாயினுள் சென்றவுடன், எனக்கு ஒரு உணர்வாற்றல் தோன்றியது. என் மனதில் ஆலயம் என்று தோன்றவில்லை. பாலன் முருகன் குடிகொண்டிருக்கும் வீடென்றே உணர்வுக் கீற்றொன்று மனதை நெருடியது. அதன்பின் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளியும் ஆசையுடன் முருகனின் வீட்டினுள் சென்று அமைதி பெறுவேன்.

இதன்பின் நான்கேட்ட ஒவ்வொன்றும் எனக்குக் கிடைத்தது. பிரச்சனைகளிலிருந்து விடுதலையாகினேன். சில விடயங்களை மட்டும் உங்கள் கண்ணோட்டத்திற்கு கொண்டுவருகின்றேன்.

* எனது கால் விபத்திற்குள்ளாகி நீண்டதூரம் என்னால் நடக்கமுடியாதிருந்தது. ஆனால் தற்போது 100க்கு 75%முன்னேற்றம் தெரிகிறது
* லண்டன் விசா முடியும் கட்டத்தில் எனது நிலமை என்னவென்று புரியாமல் தவித்தேன். சக்திவேலன் வீட்டுக்கு சென்று முழு மனதோடு எனது கஷ்டங்களைக் கூறி விசா வேண்டுமென்று வேண்டினேன். என்னால் எதிர்பார்க்க முடியாதளவிற்கு விசா கிடைத்து நான் லண்டனில் வசிக்கிறேன்.
* பணக்கஷ்டமோ அல்லது மனக்கவலையோ இருக்கும்போது சக்திவேலன் வீட்டிற்கு சென்று வேண்டுதல் செய்ய 2 நாட்களுக்குள் எல்லாமே எனக்கு சாதகமாகவே அமையும்.

இவற்றைவிட எத்தனையோ அற்புதங்கள் என் வாழ்வில் இந்த 6 மாதத்திற்குள் சக்திவேலன் அருளியிருக்கிறார். இதையெல்லாம் எண்ணும் போது, அதிசயமாகவும், ஆச்சரியமாகவும், பிரமிக்கக் கூடிய அளவிலும் உள்ளது. **வெற்றியைத் தருபவன் சக்திவேலன்.**

173, Shrewsbury Road,
E7 8QH, U.K.
Tel : **07405198227**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்திக்கும் புகழ் மணக்கும்
# திருப்புகழ்

**– வல்வையூர் அப்பாண்ணா –**

முருகப் பெருமானின் திருவடிகள் மூன்று இடங்களில் பட்டன. ஒன்று மயில் மீது. மற்றொன்று தேவர் தலைமீது. மூன்றாவது திருப்புகழ் ஏட்டில்! ஆக... முருகன் திருவடிபட்டு, அதனால் அநுக்கிரகம் பெற்ற ஒப் பற்ற பாமாலைதான் திருப்புகழ் பாடல்கள். விந்தையான சந்தம் கொண்டு சிந்தை கவர்வது. திருப்புகழ் கேட்பவர்களையும் பாடுபவர்களையும் வியப் பில் ஆழ்த்தி, பக்தியில் திளைக்கச் செய்யும் ஆற்றல் மிக்கது இது!

சந்தப் பாடல்களை முதன்முதலில் திறம்படப் பாடியவர் திருஞான சம்பந்தர். அவரைப் போலவே முருகன் திருவருளை வேண்டி "சந்தக்கடல்" என்று சொல்லத்தக்கதாக பல்லாயிரம் பாடல்களை முருகனின் பாதத் தாமரையில் சூட்டி மகிழ்ந்தார் அருணகிரிநாதர். ஆனால், இன்று நமக்குக் கிடைத்துள்ளவை - ஆயிரத்து முன்னூற்று இருபத்தெட்டு திருப்புகழ் பாடல்கள்தான்.

காசி, கயிலாயம் தொடங்கி இலங்கையிலுள்ள கதிர்காமம் வரை பல தலங்களுக்கும் சென்று அருணகிரிநாதர் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்களின் மூலம் இன்று நமக்குத் தெரிந்துள்ள ஸ்தலங்களின் எண் ணிக்கை இருநூற்று இருபத்தாறு.

அருணகிரியார் ஒருமுறை உலகை வெறுத்து உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினார். அப்போது, திருவண்ணாமலையில் தன் பாதத்தைக் காட்டி ஆட்கொண்டான் முருகன். சோளிங்கர் அருகிலுள்ள ஞானமலை என்னும் தலத்தில் இன்னொருமுறை முருகனைத் தரிசித்தபோது, முன்பு போலவே மீண்டும் திருப்பாதங்களைக் காட்டி அருள் செய்யுமாறு வேண் டுகிறார் அருணகிரிநாதர். வேண்டுதலுக்கு இரங்கி, அருணகிரிநாதருக்கு வள்ளியுடன் தரிசனம் கொடுக்கிறான் கந்தவேள். இன்றும் ஞானமலையில் முருகப் பெருமானின் பாதச் சுவடுகளை நாம் காண முடிகிறது.

"முத்தைத் தரு பத்தித் திருநகை அத்திக்கிறை சத்திச் சரவண" என்று திருவண்ணாமலையில் இறைவன் முதலடி எடுத்துக் கொடுத்து, அங்கு மௌன உபதேசம் செய்கின்றான். பின்பு, அருணகிரிநாதரை வயலூருக்கு வருமாறு அழைக்கின்றான். வயலூரில் உறையும் பொய்யா கணபதி, அருணகிரியாரிடம், "உயர் திருப்புகழ் விருப்பொடு செப்பு" என்று உத்தரவிட்டு, அதைப் பாடும் முறையையும் உபதேசம் செய்கிறார்.

தம்மை ஆட்கொண்ட வயலூர்த் தலத்தைப்பற்றி வேறு ஐம்பத் தைந்து பாடல்களில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார் என்பதை வைத்தே வயலூர் வள்ளலின் பெருமைகளை உணரமுடியும். வயலூரிலிருந்து முருகப்பெருமானை வழிபட்டுவரும் நாளில், கந்தவேள் அருணகிரியாரின் கனவில் தோன்றி, விராலி மலைக்கு போகும்படி பணிக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராலிமலைக்குச் செல்லும் வழியில், "சந்தணக் கோடு" என்னு மிடத்தில் அற்புதமாக ஆறுமுக தரிசனம் கிடைக்கிறது. "சீரான கோலாகல" எனத் தொடங்கும் விராலிமலைத் திருப்புகழில் ஆறுமுகம், பன்னிரு கரங்கள், பன்னிரு தோள்கள், இரு தாள்கள், ஆராயும் நீதிவேல், மயில், வேடமங்கை, வேழமங்கை சமேதரராக முருகன் தரிசனம்கொடுத்த அற்புதக் காட்சியை தினமும் நினைந்து இன்புறுகிறார் அருணகிரிநாதர்.

சந்தம்மிக்க திருப்புகழைப் பாடவைத்து, உலகம் முழுவதும் பரவச்செய்த திருச்செங்கோட்டு வேலவனின் பெருங்கருணைக்கு நன்றி பாராட்டுகிறார். வலது கரத்தில் வேலும் இடது கரத்தில் சேவலும் கொண்டு நிற்கிறான் செங்கோட்டு வேலவன். வேறு எங்கும் காணமுடியாத அற்புதக் காட்சியை, "சென்றே இடங்கள் கந்தா எனும்போது செஞ்சேவல் கொண்டு வரவேணும்" என வேண்டி வியந்து பாடுகிறார் அருணகிரியார். திருவண் ணாமலை, திருவிடைக்கழி, திருச்செங்கோடு, திருத்தணிகை ஆகிய தலங்களில் ஆறுமுகன் அஷ்டமா சித்திகளை அருளிச் செய்த பெருமை களை திருவகுப்புத் தொகுப்பில் குறிப்பிடுகிறார் அருணகிரிநாதர்.

கருவறையில் முருகனும் சிவனும் ஒருசேரக் காட்சியளிக்கும் ஒப்பற்ற தலமான திருவிடைக்கழியில் உள்ள குரா மரத்தடியில் முருகன் உலவிய அழகைப் பாடுவார். திருவண்ணாமலையில் அரசாண்ட பிரபுடதேவ மன்னன் கண்டு இன்புற, முருகன் ஆடிவந்த அழகை "அதலசேட னாராட...." என்னும் திருப்புகழில் படிக்கும்போது கந்தவேளின் கருணையை உணரமுடியும். "சித்ரகவியால் நான் உன் புகழ்பாட அருள் செய்வாய்"என கும்பகோணத்தில் ஆறுமுகனிடம் வேண்டுகிறார் அருணகிரியார். இந்தப் பிரார்த்தனையை சுவாமிமலை முருகன் நிறைவேற்றுகின்றான். "திருஎழு கூற்றிருக்கை" என்கிற - தேர்வடிவில் அமைந்த - சித்ரகவி பிறக்கிறது.

கொடுங்குன்றம் எனப்படும் பிரான்மலை, திருச்செந்தூர், திருத் தணிகை, சிதம்பரம் முதலான ஸ்தலங்களிலும் அவருக்கு கந்தவேளின் நடன தரிசனம் கிடைக்கிறது.

அருணகிரியார் பாடியுள்ள திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, வேல் - மயில் - சேவல் விருத்தங்கள், திருஎழுகூற்றிருக்கை ஆகிய அனைத்தும் ஒப்பற்ற பக்திப் பாக்கள்; அற்புதமான மகா மந்திரங்கள். கந்தபுராணம், சிவபுராணம், தேவிபாகவதம், ராமாயணம், பாரதம், தசாவ தாரம் இப்படி எல்லாத்திலும் உள்ள செய்திகள் திருப்புகளில் விரிவாகப் பேசப்படுகிறது. ஆண்டுதோறும் ஆனிமாத மூல நட்சத்திரத்தன்று அருணகிரிநாதர் விழா கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் பல திருப்புகழ் சபைகள் திருப்புகழைப் பாடிப் பரவுகின்றன. ஆண்டுதோறும் டிசம்பர் 31 அன்று திருத்தணிகையில் திருப்புகழ் திருப்படித் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஆகஸ்ட் 15ம் நாள் திருவண்ணாமலையில் அருணகிரி நாதருக்கு மிகப்பெரிய விழா நடைபெறுகிறது.

திருப்புகழ் மனத்தை உருக்கும். நினைத்ததை அளிக்கும். அதைப் பாடிப்பாடி இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை சேர்ப்போம் வர்ருங்கள்.

– **அப்பாண்ணா** –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தன்

அன்னதானக் கந்தனென்பதற்கான அர்த்தத்தை தினமும் சந்நிதியில் காணலாம். முருகன் வழங்கிய அருட்கொடையாக சந்நிதியான் ஆச்சிரமத்தினர் இப்பணியை தினமும் செவ்வனே நிறைவேற்றி வருகிறார்கள். அண்மைக்காலமாக அதிகளவில் வெளிநாடுகளிலிருந்து தினமும் அன்பர்கள் சந்நிதிப் பெருமானைத் தரிசிக்க வந்தவண்ணமுள்ளனர். இவர்கள் முருகனின் பூசை, வழிபாடுகளில் பங்குபற்றியபின் மனம் நிறைந்தவர்களாக, அவன் பதியில் ஆரஅமர இருந்துவிட்டு, சந்நிதியான் ஆச்சிரமத்திலும் மிக விருப்புடன் பசியாறிச் செல்வதானதும், ஆலய சூழலில் முருகனே கதியென நிரந்தரமாகத் தங்கியிருக்கும் அடியவர்களுக்கும் அமுதளிப்பதானதும் சந்நிதி முருகனின் அருட்கடாட்சமேயாகும்.

வெள்ளிக்கிழமை தோறும் மற்றும் விசேட தினங்களில் அடியார் மடம் மற்றும் பல மடங்களில் அன்னதானம் நடைபெறுகின்றன. மகோற்சவ காலங்களில் அன்னதானம் நடைபெறும் மடங்கள் பெருமளவானவை. யுத்த சூழ் நிலைக்கு முற்பட்ட காலங்களில் சந்நிதியைச் சூழ 42 அன்னதான மடங்கள் இயங்கியிருக்கின்றன. தற்போது வருடந்தோறும் அன்னதான மடங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றைவிட ஆலய பூங்காவன மண்டபத்திலும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவற்றைவிட தேர், தீர்த்த விழா நாட்களில் மடங்கள், கட்டடங்களைவிட, ஆங்காங்கே பெரும் மரநிழல்களில் கூட மக்கள் குழுமங்களாக சமையல் செய்து உறவுகள், சுற்றமென சந்நிதி மண்ணில் கூடியிருந்து மகிழ்வில் திளைத்து அமுதருந்துவதும் அவன் விருப்பமே.

ஆசிரியப் பணியுடன், நித்தமும் ஆத்மீகப்பணி புரிந்து, நீர்கொழும்பில் வசிக்கும் திரு. ஜெகநாதன் ஆசிரியர், குடும்பத்தினர், ஆத்மிகப்பணி சார்ந்த அவர் குழுவினர், பொன்னாலை வரதராஜப்பெருமாள் பஜனைக்குழு அன்பர் மா. உதயகுமார் எனப் பலர் நீர்கொழும்பிலிருந்து பாரவூர்திகளில் அரிசி, மரக்கறி வகைகள், சமையல் பாத்திரங்களுடன் வருகைதந்து அன்னதானம் செய்யும் நிகழ்வானது, அன்னதானக் கந்தனின் அருளாட்சியை வியக்கவைக்கின்றது. இது ஒவ்வொரு வருட சப்பறத் திருவிழாவிலும் தெய்வேந்திரஐயா மடத்தில் நிகழுந்துகொண்டிருக்கின்றது.

சந்நிதிக் கந்தனின் அருளாட்சியானது, பெரும் வேடிக்கைகள் தவிர்த்து, ஆண்டிக் கந்தனாக வீற்றிருந்து, அன்பர்களனைவரும் பசியாற வேண்டுமென்பதும், துன்பப்பட்டவர்கள் நற் பலனடைந்து, அற்புதங்கள் மிக அதிகமாக நிகழும் தலமாகத் திகழவேண்டுமென்பதே பெருமானின் சங்கல்ப்பமாக இருக்கின்றது. இதனால்த்தான் சந்நிதியில் வீசேட பூசைகள் நண்பகலுக்குப் பின் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், மடங்களெல்லாவற்றிலும் நண்பகல் 12 மணிக்கே அன்னப்பணி ஆரம்பமாகிவிடுவது போற்றுதற்குரியது.

- ஸ்ரீவாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணபவனின் அற்புதச் செயல்

**பொன். வல்லிபுரம், மாணாங்கானை, வல்வெட்டித்துறை**

அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனும் ஆன்றோர் கருத்தின்படி, பூவுலகில் தோற்றமெடுத்த ஜீவராசிகள் அனைத்திற்கும் பிறந்த அன்றைக்கே இறப்பு என்கின்ற எதிர்ச்சொல் உண்டு.

ஆனாலும் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் அரன் நாமங்களை உச்சரிக்கும் தேவார, திருவாசக மெய்யடியார்களுக்கும், பக்திநெறி தவறாத தபோதனர்களுக்கும் விதிவயப்படும் வேளைகளில் பெருமானார்களால் விதி விலக்களிக்கப்பட்டு, கால எல்லை முடியத் தங்களால் ஆட்கொள்ளப்பட்ட நடைமுறைகள் எவ்வளவோ உண்டு.

16 வயது மார்க்கண்டேயர் பெருமானிடம் அடைக்கலம் புகுந்த சரித்திரம் சான்றுபகரும். இதை எழுதும் எனக்கு தற்போது 82 வயது. இத்தனை வயதுக்கிடையில் பலதடவைகள் ஏற்பட்ட விபத்துக்கள், கொடிய நோய் பிணிகள், யுத்த காலங்களில் பற்பல தடவைகள் ஏற்பட்ட பயங்கரங்கள், கெடுதிகளிலிருந்து மயிரிழையில் காப்பாற்றிய எங்கள் ஞானபண்டிதன் முருகனின் அனுக்கிரக மகிமையை எழுத அடியேன் மதிதீரனல்லன்.

ஆனாலும் முருகனின் மகிமையை பல கோடி வருடங்கள் சென்றாலும் சொல்லி முடியாதென பரமேஸ்வரனானவர் பார்வதி தேவிக்குச் சொன்னாரென கந்தபுராணத்தில் உண்டென்று ஒரு பெரியார் உரைத்ததை ஒரு நூலில் படித்தேன்.

முருகன் மாம்பழத்திற்காக உலகைச் சுற்றிவந்தார். பிள்ளையார் தாயாரையும் தகப்பனாரையும் சுற்றிவந்து மாம்பழத்தைப் பெற்றதைக் கண்டு, தாயார், தந்தையார், அண்ணன் யாபேரையும் விட்டு மலைமீதில் ஆண்டியாகி இருந்தார். அப்போது அம்மையும் அப்பனும் சென்று "உனக்கா பழம் வேண்டும். நீயே! ஆனந்தச்சாறு நிறைந்த அமுதப் பழம், அற்புதச்சாறு நிறைந்த தவப்பழம், ஞானமே உருவான ஞானப்பழம் - நீயே பழம்" வாவென்று கூட்டி வந்தார்கள். முருகன் ஆண்டியாகி வீற்றிருந்த மலையே பழநி மலையென்று நாமம் சூட்டப்பட்டது. புராணத்தில் மாதுழம்பழத்திற்காக முருகன் உலகைச் சுற்றிவந்தார் என்றும், மாம்பழத்திற்காக உலகைச் சுற்றிவந்தார் என்றும் உள்ளது. எப்படிப் பார்த்தாலும் என்றும் இளமையுடைய பாலன் முருகன் பழமே பழம்தான்.

*இப்புத்தகத்திற்கு*
**"சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும"**
*என்கின்ற நாமத்தைத் சூட்டியவர், முருகன் பதமடைந்த அடியார்மட நிர்வாகி அமரர் ம. வெங்கடாசலம்பிள்ளை ஐயா அவர்களை என்றும் நினைவுகூருகின்றோம். (ஆ-ர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவற நிலையைத் தந்ததேனோ...! முருகா!!

- இப்புத்தக தொகுப்பாளர் சி. சிவகுமாரன் -

இக்கதை, ஒரு குடும்ப உள் விவகாரக் கதை என்றில்லாமல், இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் அற்புதங்களை நிகழ்த்தி மக்களிடையே சமய வழிபாட்டுப் பற்றுதல்களை மென்மேலும் மேம்படுத்திக்கொண்டிருக்கும் அம்பாளுடனும், முருகனுடனும் போர் தொடுத்துக் கொண்டிருக்கும் நவீன அசுரர்களுடைய கதையாகும்.

1995ல் இடம்பெயர்ந்து வன்னியில் வசித்து வருகையில், இறைவனுடனான நேரடித் தொடர்பு அடியேனுக்குக் கிடைத்தது. தியாணத்தில் இறை நடன தரிசனங்களைக் கண்டுகளித்துப் பேரின்பமடையும் வரத்தை அம்பாளும் முருகனும் வழங்கினார்கள். இதன் பின் வன்னியில் இறையருளால் பற்பல அற்புதங்களை நிகழ்த்தியதற்காக, அம்மக்கள் பஞ்சலோகத்திலான அம்பாள் விக்கிரகத்தையும் வேற்பெருமானையும் வடிவமைப்பித்துத் தந்தார்கள். 2003ம் ஆண்டு மீண்டும் ஊருக்கு வந்தபோது அம்பாளையும், வேற்பெருமானையும் கொண்டுவந்தேன். வீட்டுக்கு வந்தவுடன், ஆலயக் கட்டடம் இல்லாத படியால், சுவாமியறையில் பூசை ஆரம்பிக்காத நிலையில் ஒரு மேசைமீது அம்பாளையும், முருகனையும் வைத்துவிட்டேன். ஒரு வாரம் கழிந்த நிலையில் அயலிலுள்ள பெண்ணொருவர், தனது 07 வயதுப் பெறாமகனுக்கு சுவாசப்பையில் துவாரம் இருந்ததனால் கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சை செய்தபின்பும் அப்பையன் சுகப்படாத நிலையில், உணவருந்தாமல், சோர்வடைந்திருப்பதாகக் கூறி, உடனடியாகப் பார்வையிடும்படி வற்புறுத்தியதின் பேரில், திடீரெனப் பூசை ஆரம்பித்து, அப்பையனை விபூதி போட்டுப் பார்வையிட்டேன். அவர்கள் தங்கள் வீட்டுக்குச் சென்றவுடன் அப்பையன் உடனேயே உணவு உண்டதாகவும், சுகமடைந்து விட்டதாகவும் கூறினார்கள். **பின்பு இவர்களே அசுரர்களாக செயற்பட்டார்கள்.** சிவனிடம் வரத்தைப் பெற்றுக் கொண்ட ஓர் அசுரன் தான் பெற்றுக்கொண்ட வரம் பலிக்குதா என்றறிய சிவன் தலைமீதே தன் கையைவைத்துச் சோதிக்க முற்பட்டது போன்ற அசுரர்கள் இன்றைய கலியுகத்திலும் இருக்கிறார்களென்பதை அறியக்கிடக்கின்றது.

தொடர்ந்து பூசையாற்றி வருகையில், எனது மனைவியின் சகோதரர்கள் வெளிநாடுகளிலிருந்து கடுந்தொனியில் கட்டளை பிறப்பித்தார்கள். "நடுவீட்டுக்குள் அம்மனை வைத்திருக்க வேண்டாம். ஒரு வாரத்துக்குள் அம்மனை எங்காவது கோயிலில் கொடுத்து விடுங்கள்" இல்லையேல் எங்கள் உறவு நிலையெல்லாம் முறித்துவிடுவோம் என்று தொலைபேசியில் அச்சுறுத்தினார்கள். எனது வீட்டிற்கு அண்மையில் வசிக்கும் மனைவியின் தாயார் வந்து, "நான் தந்த சீதணக் காணியில் கோயில் கட்டினால் குடியே அழிந்துவிடும். நீ இறந்தால் கோயிலை யார் பராமரிப்பது" என்று மறுபுறத்தில் நெருக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைமானாற்றில் தொழில் செய்துகொண்டிருந்த கதிர் காமரை முருகன் வந்து ஆட்கொண்டபின், கதிர்காமர் முருகனுக்கு சிறுகொட்டில் அமைத்தபோது, "நீ இறந்தபின் கோயிலை யார் பராமரிப்பது" என்று தடுத்திருந்தால், இதை நினைக்கவே மனம் கூசுகின்றது. வழி வழியாக இன்று பெரும் பூசகர்கள் கூட்டமே சந்நிதியில் பிரவாகிக்கின்றது.

இதன்பின் மனவேதனையோடு அம்பாளுடன் கதைக்கையில், அம் பாள் உத்தரவு, "மகனே! உன் பெண் உறவுகலெல்லோரும் எதிர்த்து நிற்கையில், நீ தனித்துநின்று சமாளிக்கமாட்டாய். எனது ஆசனமான விக்கிரகத்தை கோயிலில் கொடுத்துவிடு. உன் அளவுகடந்த அன்பிற்காக வீட்டுவளவு வேப்பமரத்தில் தோற்றமாகிறேன். என் ஆசனத்தைக் கொடுக்கச் செய்ததற்காக எங்கிருந்து வற்புறுத்தல்கள் வந்ததோ, அங்கேயே இரண்டு தண்டனைகளை வழங்குகிறேன்" என்றா புவமீன்ற தாயார்.

புத்தகத்தில் எழுதமுடியாத, ஒரு கடும் தண்டனையும், இன்னு மோர் நகைச்சுவையான, அதிசயத் தண்டனையும் வெளிநாட்டில் நிகழ்ந்து விட்டது. இறைதண்டனைகள் எப்படியெப்படியெல்லாம் எங்கெங்கு நிகழு மென்று யாரும் அறியமுடியாதது. சந்நிதியில் தேர் எரித்தவர்களுக்கு என்ன நடந்ததென்று உலகறிந்த விடயம். அண்மையில் வீதி அகலிப்பின் போது இணுவிலில் நடந்த அதிசயம். வீதியோரத்தில் பிள்ளையார் குடியிருக்கும் ஒரு சிறு கோயில். வீதி அகலிப்புச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மாற்றுமத முக்கியஸ்தர் ஒருவர் கட்டளையிட்டார் அக் கோயிலைத் தகர்த்துவிடும்படி. அன்றிரவிலிருந்து அவருக்கு கடும் சுகவீனம். எந்த மருந்துக்கும் சுகம் வரவில்லை. பின் அவரே அக்கோயில் புதியவடிவில் அமைவதற்கு ஒத்தாசை புரிந்தபோது தெளிந்துகொண்டார். துர்க்கையம்மன் கோயில் நகைகள் களவுபோனபின் என்ன நடந்ததென்பதும் உலகறிந்த விடயம். சிலாபம் பத்திரகாளி கோயிலில் நடந்த சம்பவத்திற்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்ற இச் சம்பவங்களையெல்லாம், அண்மையில் ஒரு விசாரணையின்போது, எனது இரண்டாவது மகனுக்கு உபதேசம் செய்யப்பட்டது.

வேம்பில் தாயார் தோற்றம் கொள்ளும்போது வேம்பின் பட்டைகள் அகன்று அன்னையானவள் தன்னுருவம் கொண்டு தோற்றமாகியபின், இந்த நாட்டு மக்கள் மாத்திரமல்ல, பற்பல நாடுகளிலிருந்தும் துன்பப்பட்ட மக்கள் வேம்பின்கீழ் வந்து அதிசயிக்கத்தக்க பெரும் பேறுகளை அடைந்து கொண்டார்கள்.

எனது மூத்தமகன் கடந்த ஒன்பது வருடங்களாக சுவிஸில் இருக்கின்றான். ஒருதடவை எனக்கு சிறுதொகை பணம் அனுப்பியபின் அவன் தடுக்கப்பட்டான். "நீ காசனுப்பினால் அவர் கோயில் கட்டிப்போடுவார். இனிமேல் எக்காரணம் கொண்டும் காசனுப்பக்கூடாது" என்று தடுக்கப் பட்டான். இதைநினைத்து அடியேன் கவலையடைந்தபோது, முருகன் சொன்னார், "அன்பர்கள் மூலமாக உனக்குத் தேவையான, நிறைவான செல்வமனைத்தும் கிடைக்கச் செய்கிறேன்" என்றதன்பின் உண்மையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே வெளிநாடுகளில் உள்ள துன்பப்படும் அன்பர்களுக்கு இங்கிருந்த படியே அடியேன் நிகழ்த்திக் கொண்டிருக்கும் அற்புதங்களினால் தேவை யான பணம் கிடைத்துக் கொண்டிருக்கையில், அம்பாளின் உத்தரவு - வேம்பின்கீழ் சிறு ஆலயம் அமைத்துக்கொள் என்று கட்டளையிட்டா. அவ்வேளை, அடியேன் நினைத்துக் கொண்டேன், அம்பாள் வழங்கிய தண்டனையால் திருந்திவிட்டார்கள் போலும், கோயில் கட்டுவதை இனித் தடுக்கமாட்டார்கள் என்று.

சிறு பையனுக்கு சுவாசப்பைத் துவாரம் காரணமாக எந்தப்பெண் வந்து அம்பாள் பூசையை ஆரம்பிக்கச் செய்தாவோ - அந்தப் பெண்ணே அம்பாள் பூசையை நிறுத்தவேண்டும், அவ்விடத்தில் அம்பாளை இல்லாது செய்யவேண்டுமென்ற மூர்க்கத் தனத்துடன் பல லட்சங்களைச் செலவ ழித்தும் சகல கொடூரங்களுக்கும் அசுர செயற்பாடுகளுக்கும் மூலகாரண மாவார். களவுகள், மந்திரங்கள், மாயங்கள், மாந்திரீகங்கள், அவதூறுகள் என இத்தனையையும் பிரயோகித்தும் அம்பாளின் பூசையை நிறுத்தவோ, மக்கள் பெருமளவாக வருவதனையோ தடுத்தநிறுத்த முடியவில்லையே என்கின்ற வேக்காட்டில் தான் மறைபொருளாக இருந்துகொண்டு அடி யேனை நீதிமன்ற வழக்கில் ,சிக்கவைத்ததும், இதில் சந்நிதி முருகன் காப்பாற்றிய கதையை சென்றவருட (2011) வெளியீட்டில் "நீதிமன்றத்திற்கு வந்த சந்நிதி முருகன்" என்ற தலைப்பில் உண்மைத்தன்மையை ஆதாரபூர்வமாக எழுதியிருந்தேன். இந்த நீதிமன்ற விவகாரம் எங்களுக்கும் அம்பாளுக்கும் மேற்கொண்டுவந்த கொடூரங்களில் ஓர் அங்கம் மட்டுமே. மந்திரங்கள் மாயங்கள் எவையுமே வெற்றியளிக்காததனால் இறுதியாக மிகப் பெரும் தந்திரோபாயத்தைப் பிரயோகித்தார்.

அம்பாளின் உத்தரவின்பேரில், 2012 தைமாதம் வேம்பின்கீழ் 7 சதுர அடியில் மட்டும் ஒரு சிறு ஆலயமும், எமக்கான புதியவீடும் கட்டத் தொடங்கவேண்டுமென்ற முன் ஆயத்த நிலையில், பெருந்தொகையான கற்கள் அறுத்தும், கல், மண் முதலான சகல மூலப்பொருட்களும் பறிப்பித் திருந்த வேளையில்,

ஏற்கனவே பூசை செய்வதற்கோ, கோயில் கட்டுவதற்கோ உடன் பாடில்லாத நிலையிலிருந்த வெளிநாடுகளிலுள்ள என் மனைவியின் சகோதரர்களுக்கு அப்பெண், நான் வீடு கட்டவிருந்ததை மறுதலித்து, "பெரிய கோயில் கட்டப்போகிறார். அயலிலுள்ள எல்லோரும் பாதிக்கப்படப் போகின்றோம்" என்ற தவறான தகவல்களை வழங்கி தான் செயற்படுத்திய சதித்திட்டத்திற்குத் துணையாக அவர்களை உள்வாங்கிவிட்டா.

இத்தனை காலமும் அடியேன் அம்பாளுக்குச் செய்துவந்த பூசை, தொண்டுகள், துன்பப்பட்ட மக்களுக்கு அற்புதங்களை நிகழ்த்துதல் முதலான சகல இறை நிகழ்வுகளுக்கும் ஒத்தாசையாக இருந்துவந்த என் மனைவி, பிள்ளைகளுக்கு சகோதரர்கள் மூலமாகவே பெரும் அழுத்தங்கள் கொடுத்து, தவறான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதன்பின் சுவிஸிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள், என் மனைவி பிள்ளைகளை தம்பக்கம் வசப்படுத்திய நிலையில், மௌனிகளாக இருக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிட்டு, அவர்கள் முன்னிலையிலே 30-12-2011 அன்று இரவு 3 மணித்தியாலங்கள் அடியேன் மீது மிகப்பெரும் அடாவடி புரிந்துள்ளார்கள். இவர்களில் ஒருவன், எனது சகலன். அவனது திருமண வேளையில் அடியேனும் மனைவியும் மணவறையின் முன்பாக இருந்து என் மைத்துணிக்கு பெற்றோர்களென்ற நிலையிலிருந்து தாரைவார்த்துக் கொடுத்தோம். என்மீது அடாவடி புரிந்துகொண்டிருக்கும் போது, கூறினேன், "நான் உனது தந்தைக்குச் சமன், பெருந்தொகையான மக்கள் என் காலில் விழுந்து வணக்கம் செலுத்துகிறார்கள். கள்ளர்களைப்போல என்னை முதுகில் பிடித்துத் தள்ளித் திரியாதை. கைநீட்டாதை" என்று மிக வேதனையான நிலையிலிருந்துகொண்டு சொல்லிப்பார்த்தேன். காலம்காலமாக நாயன்மார்களையும் சாதுக்களையும் சோதித்து வேடிக்கை பார்த்தது போல் இப்படிச் சோதிக்கிறீர்களேயென்று அம்பாளையும் முருகனையும் மனம்நொந்தேன்.

அன்றிரவு 10 மணிபோல் தான்தோன்றி வேப்பமரத்து அம்பாளின் முன்நின்று கண்ணீரை மட்டும் காணிக்கையாக்கிவிட்டு, அடியேன் துறவற நிலையில் ஆண்டியாகினேன். இரவு 10.30 மணிபோல் சுவிசிலிருந்து தொலைபேசியில், "இனியுன்னால் உடுப்பிட்டியில் கோயில் கட்டமுடியாது, நீபோய் ஏழாலையில் கோயிலைக் கட்டு" என்று எனது மூத்தமைத்துணி சவால் விட்டா. அன்றிரவு, அம்பாள் முகம் கறுத்து, வியர்வை நிறைந்தபடியே பெரும் மூக்குத்தியணிந்த கோலத்தில் காட்சிதந்தார்.

நீதிமன்ற வழக்கில் மகனையும் சேர்த்துத்தான் சிறையில் தள்ளவிரும்பி, பொய்க்குற்றச்சாட்டு சுமத்தி எனக்கும் மகனுக்கும் கையில் விலங்கு பூட்டி, சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றமுன்பே அம்மனும் முருகனும் அற்புதம் புரிந்து கைவிலங்கு கழட்டியது முதலாக, அதிசயிக்கத்தக்க இன்னும் பற்பல அற்புதங்களை நேரடியாக அனுபவித்த எனது இரண்டாவது மகனிடம், "உன்னை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்கிறோம். கோயில் கட்டவிட்டால் துன்பப்படப் போகிறீர்கள், அழியப் போகிறீர்கள்" என்றவாறாக பற்பல கதைகளையும் ஆசைவார்த்தைகளையும் கூறித் திசைமாற்றி, அவனை தந்தைக்கெதிராகச் செயற்பட வைப்பித்ததன் காரணமாக இதன்பின் அவுஸ்திரேலியாவிற்கு அழைத்துக் கொண்டார்கள்.

யோகர் சுவாமிகள் போல் தனித்த நிலையில் வாழ்ந்து அரைகுறை சமையல் செய்தும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் சாப்பிட்டும் வாழ்கிறேன். **துறவறம் என்மீது திணிக்கப்பட்டதா?** அல்லது இறைவன்தான் இந்தநிலையை விரும்பி நடத்தும் நாடகமா? எப்படிப் பார்த்தாலும் பாதகர்கள் செய்த கொடூரம் கொடூரமே தான். பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவி, கடும் பொருளாதாரத் தடை, யுத்தங்களிடையேயும், வன்னியில் வீடுகட்டி, மண்ணாலே கோயில் கட்டி, அச்சகம் நடாத்தி எந்தவொரு குறையும் இல்லாமல் வாழந்து வந்தோம். அசுரர்களிடையே வந்ததனால்தான் இந்தநிலையா?

ஆனாலும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மிகப் பெருந்தொகையான அன்பர்களின் அன்பும் ஆதரவும் அரவணைப்புமே சிறு ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கின்றது. ஆரம்பத்தில் எனது கடைசிச் சிறு பிள்ளைகளை நினைத்து தனியேயிருந்து பிரிவுத்துயர் தாங்கமுடியாத நிலையில் பாடசாலையில் சென்று பிள்ளைகளைப் பார்த்துக் கதைப்பேன். திரைப்படங்களில் வரும் காட்சி என் வாழ்க்கையில் வந்ததேயெனக் கலங்கினேன்.

அப் பாதகர்களின் தீர்மாணம்:- அடியேனை வீட்டால் வெளியேற்றிய பின் நாட்டில் சிறிதுகாலம் தங்கிநின்று, ஆலயத்திற்கான சுவடுகளே இல்லாமல் செய்துவிடுவோம் என்ற தீர்மாணத்துடன் வந்தவர்களுக்கு, ஆத்தாள் ஆரம்ப எச்சரிக்கைத் தண்டனையை உடன் வழங்கியபோதே மூன்றாம் நாள் நாட்டைவிட்டே சுவிஸிற்கு ஓட்டமெடுத்தார்கள்.

பொது இடங்களில் இருக்கிற பெரும் ஆலயங்கள் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களாக இருப்பதனால் - யாழ் மாவட்டத்தில் எத்தனை ஆலயங்கள் இருக்குதென்பதை மதிப்பிடலாம். ஆனால் யாழ் மாவட்டத்தில் வீட்டு வளவுகளிலும், மற்றும் ஆங்காங்கே ஏறக்குறைய 1000 சிறு சிறு ஆலயங்கள் இருக்குமாவென என்மனதில் ஒரு மதிப்பீடு போட்டபோது, ஆத்தாள் ஒரு கணக்கைச் சொன்னா - 2400 ஆலயங்கள் இருப்பதாக. இத்தனை சிறு ஆலயங்கள் உள்ள வீடுகளெல்லாம் பின்னடைந்தா விட்டார்கள். அண்மையில் ஏழாலை மேற்கில் ஒரு வீட்டுக் கிணற்றில் பிள்ளையார் உருவம் தோன்றியிருப்பதைக் கண்டு அதிசயப்பட்டார்கள். பின் அவ் வீட்டுக்காரருக்கு பிள்ளையார் கனவில் தோன்றி, "கிணற்றுக் கருகில் தனக்கு ஒரு சிறு ஆலயம் அமைக்கும்படி" உணர்த்தியவுடனேயே ஆலயம் அமைத்து விட்டார்கள். ஆனால் வாக்குரைத்துக் காட்சிகள் காட்டி, அற்புதங்கள் நிகழ்த்தி, சகல சிறப்புக்களையும் வழங்கிக் கொண் டிருந்த ஆத்தாளுக்கு எனது சொந்தக் காணியில் ஒரு நிழல் கொடுப் பதற்குத் தடைபோட்டு, வன்முறையைப் பிரயோகித்தது ஓர் அசுரச் செயலே.

எந்த நிலையிலும், சட்டரீதியாகவோ அல்லது என்னுடன் அன்புபூண்டுள்ள உயர் பதவிகளிலுள்ளவர்களின் அல்லது பெருந்தொகை யான அன்பர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தியோ இப்பிரச்சனைக்கு அடியேன் தீர்வுகாண விரும்பியிருக்கவில்லை. இதை விரும்பியிருந்தால் அடியேன் வீட்டால் வெளியேற்முன்பே ஒரு போன் தகவலோடு தீர்வு கண்டிருக்கமுடியும். இது அம்பாளது அருளாடலுக்கும், வழிபாட்டுக்கும் ஏற்படுத்தப்பட்ட அசுரச் செயல். அடியேன் சாதுவாகவே வாழ்வதனால், இதை அம்பாளும் முருகனுமே பார்த்துக்கொள்ளட்டும்.

இப்போதெல்லாம் எனக்கு அபிஷேகம், பூசை செய்கிற பணி மறுக்கப்பட்டு, வேப்பமரத்தடியை விட்டு அடியேன் வெளியேற்றப்பட்டி ருந்தாலும், என்றும் இறையருள் அடியேனுடன் கூடவே இருப்பதனால் பல தலங்களுக்குச் செல்வதும், இறைகாட்சிகளைக் காண்பதும், தொலை பேசியிலும், நேரடியாகவும் வாக்குரைத்து அன்பர்கள் துயர் தீர்க்கும் நற்பணிகளைத் தொடரக் கூடியதாகவும் உள்ளது.

**"தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், மறுபடியும் தர்மம் வெல்லும்"** – பகவான் ஸ்ரீகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எக்காலமும் சந்நிதியில் நின்று தனது வெண்கலக் குரலால் முருகனைப் பாடும் பணியையே பணியாகக் கொண்டு, பாடிப் பாடி 08-03-2012ல் முருகன் பதமடைந்த வாரி. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

எம்மை எமக்கு அறிவித்தார் எங்கள் குரு சுவாமி !
எம் இதயம் குடிபுகுந்தார் கிருஷ்ணர் குரு சுவாமி !
அவர் எங்கள் குரு சுவாமி !
இணைந்திருங்கள் என்று சொன்னார் எங்கள் குருசுவாமி!
பஜனை பாடும் குடும்பம் பிரியவேண்டாம்
என்று சொன்னார் கிருஷ்ணர் குரு சுவாமி !
அவர் எங்கள் குரு சுவாமி !
கந்தன் புகழ் பாடச்சொன்னார் எங்கள் குரு சுவாமி !
வேலன் புகழ் பாடச் சொன்னார் கிருஷ்ணர் குரு சுவாமி !
அவர் எங்கள் குரு சுவாமி !
ஆண்டுகள் பல சேர்ந்து வாழ்ந்தார் எங்கள் குரு சுவாமி !
ஆல்போல் ஓங்கிநின்றார் கிருஷ்ணர் குரு சுவாமி !
அவர் எங்கள் குரு சுவாமி !
இறையடியே வேண்டிநின்றார் எங்கள் குரு சுவாமி !
இறைவனடி சேர்ந்துவிட்டார் கிருஷ்ணர் குரு சுவாமி !
அவர் எங்கள் குரு சுவாமி !
தொல்லை பல வந்தாலும் எங்கள் குரு சுவாமி !
பஜனை செய்து மகிழ்ந்து, மகிழ்ந்திடுவார் கிருஷ்ணர் சுவாமி
அவர் எங்கள் குரு சுவாமி !

**உண்டியல்:** "2011 அற்புதங்கள் புத்தகத்தை" பெற்றுக்கொண்ட ஒரு சிறுமி முருகனின் அற்புதங்களைப் படித்தபின், 2012 புத்தகத்திற்கு வழங்கவென உண்டியலில் தினமும் காசு போட்டுவந்துள்ளா. கரணவாய், கருணையம்பதி மூத்தவிநாயகர் கோவில் அருகில் வசிக்கும் தயா-இந்துமதி தம்பதிகளின் புத்திரியே இச்சிறுமி. 21-07-2012 அன்று அடியேனிடம் உண்டியலைக் கையளிக்க முற்பட்டபோது, "இவ்வெளியீட்டின் முதற்பிரதிகளை சந்நிதியில் முருகனின் பாதத்தில் பூசைக்கு வைக்கும்போது, உண்டியலையும் சேர்த்து சமர்ப்பணம் செய்யலாம்" என்று கூறிவிட்டு, இச்சிறுமியின் அன்பிற்குள் நெகிழ்ந்த முருகனவன் சொன்ன தகவல்களைக் கூறினேன். "உங்களுக்கு மேன்மையைத் தருவேன் என்பதற்கத்தாட்சியாக, பாம்பு வடிவிலும், கனாவிலும் முருகன் வருவார்" என்றேன். மறுநாள் நாகபாம்பு வீட்டுக்கு வந்ததாகவும், அன்றிரவு முருகன் காட்சிதந்ததாகவும் போனில் சொன்னார்கள். - *புத்தக ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமுவந்து நிதியளித்தோர் விபரம்

| | |
|---|---|
| லண்டன் சக்திவேலன் Temple | 100,000.00 |
| N. பிரதீபன், Eastham, London. (மல்லாகம்) | 40,000.00 |
| அருந்தவராஜா வசந்தாதேவி, வடக்குத் தோட்டம், சமரபாகு (கனடா) | 13,050.00 |
| செல்வி சுதர்சினி சுத்தானந்தன், பிரான்ஸ். (மடிப்பிச்சை மூலமாக) | 12,600.00 |
| பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை. (ஊறணி) | 10,500.00 |
| ஆ. யோகானந்தம், அல்வாய் மேற்கு, திக்கம். | 10,000.00 |
| வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம், பருத்தித்துறை | 5000.00 |
| கலைமகள், (அம்மான் செல்லத்துரையின் பேர்த்தி) வல்வெட்டித்துறை | 5000.00 |
| இ. வரதீஸ்வரன், (செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு). | 5000.00 |
| திரு. திருமதி ஜெகதீஸ்வரன் (தயா) - இந்துமதி குடும்பம் கரணவாய். | 5000.00 |
| திருமதி திருமேனிப்பிள்ளை மாணிக்கரெத்தினம், வல்வெட்டித்துறை. | 5000.00 |
| M. லவகீசன், வைத்தீஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம் | 5000.00 |
| பிள்ளையார் அச்சகம், நல்லூர் - யாழ்ப்பாணம் | 5000.00 |
| பருத்தித்துறை பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள் | 4500.00 |
| N. நிரோஜன், நிரோ டிஜிற்றல் போட்டோ, வல்வெட்டி. | 3000.00 |
| இலங்கை வங்கி, விரிவாக்கல் கிளை, வல்வெட்டித்துறை | 3000.00 |

| | | | |
|---|---|---|---|
| வல்வை சிவகுரு வித்தியாசாலை | 2450.00 | தயா அச்சகம், யாழ்ப்பாணம் | 1000.00 |
| செல்வி அன்புக்குமாரி, குப்பிளான் | 2000.00 | பு.செந்தில்நாதன், வியாபாரிமூலை | 1000.00 |
| சிவதாசன்சிவாஜினி,அந்தனத்திடல் | 2000.00 | கஜாணன் மலேசியா (ஏழாலை) | 1000.00 |
| செல்வகௌரி ஆசிரியை பருத்தித். | 2000.00 | சீலைன்ஸ் கொம்பிளக்ஸ், உடுப். | 1000.00 |
| தவராசா தங்கமலர் நாரஹேன்பிட்டி | 2000.00 | உதயதேவன் Engineer கொழும்பு | 1000.00 |
| நாகமுத்து ஆசிரியை கம்பர்மலை | 2000.00 | இ. ஜெயக்குமார் நாயன்மார்க்கட்டு | 1000.00 |
| உதயஜோதி, மாணிப்பாய் | 2000.00 | அப்பன் தின்னவேலி மார்க்கட் | 1000.00 |
| வல்வெட்டி இ.த.க. பாடசாலை | 1500.00 | கிருபா-வினோதன் உடுப். மாக்கட் | 1000.00 |
| வே. சிவநாதன் வல்வெட்டித்துறை | 1000.00 | செ.உலகநாதபிள்ளைவியாபாரிமூலை | 600.00 |
| து.தர்ஷினி மயிலிட்டி. சக்கோட்டை | 1000.00 | கி.சிவசோதி, கருணாநிதி ச.ச.நி | 500.00 |
| வீ.பாலேந்திரதாஸ்,வல்வெட்டித்துறை | 1000.00 | V.பாக்கியராஜா (Police) பதுளை. | 500.00 |
| அன்பு, சரஸ்வதிவிலாஸ் கோப்பாய் | 1000.00 | சுடர்எழிலன்(தீபா) வல்வெட்டித்துறை | 500.00 |
| ஜெயவதனாதங்கவடிவேலு மயிலிட்டி | 1000.00 | திசா களஞ்சியம், நெல்லியடி | 500.00 |
| கை.லோகநாதன் திருப்பூர்மயிலிட்டி | 1000.00 | த. ஜெயந்தன் உடுப்பிட்டி மாக்கட் | 500.00 |
| | | | 254700.00 |

எழுத்தாளர், தொகுப்பாளர் :- சி. சிவகுமாரன், Mobile 0778285599
கணனி வடிவமைப்பு :- ஸ்ரீவாணி வெளியீட்டகம், வல்வெட்டி.
அச்சுப்பதிப்பு, புத்தகமாக்கல் :- தீபன் பதிப்பகம், பருத்தித்துறை.
அச்சிட்ட பிரதிகள் :- பதின்மூன்றாயிரம் (13,000)

முதல் மூன்று வெளியீடுகளுக்குமான நிதியானது, அடியேன் அடியவர்களிடம் தொடர்பு கொண்டபோது கிடைத்துக்கொண்டது. இந்தவருட வெளியீட்டுக்கு முருகனின் அருட்கடாட்சம், ஒருசில பொதுநிறுவனங்களின் நிதியைத்தவிர, பெருமளவானவை அடியேனின் இருப்பிடம் நாடிவந்த அடியார்கள் வழங்கத்தக்கதாக அருள் பாலித்தான் சந்நிதியான். எல்லாப் புகழும் - பண்டும், இன்றும், என்றுமுள்ள குமரனுக்கே. (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகெங்கிலும் இந்துசமயம்
## தானாகவே வளர்ச்சிப் பாதையில்
## மேன்மைகொள்கின்றது



கடைக்கண் பார்வையிலே
எண்ணிலடங்கா அற்புதங்கள் நிகழ்த்தியே!
விரைந்து வளர்ச்சியுறும்
லண்டன் - என்பீல்ட் நாகபூசணித்தாயே!
இப் புத்தக வெளியீட்டுப் பணியினாலே
உதயமாகி, அருள்வாக்குரைத்து,
அற்புதங்கள் ஆற்றும்
லண்டனில் "சக்தி வேலனே"!
இச் சந்நிதியான் "அற்புதப்
புத்தகத்தில் இடம்பிடித்து,
அருள்சுரக்க தானோடிவந்தே
இடம்பிடித்த அற்புதமும்,
என்றுமுள்ள இறை அழகும்
அடியேனைக் கொள்ளை
கொண்டு, இப்புத்தகத்தில் இடம்பிடித்து
ஈர்த்தென்னை ஆண்டு
கொண்ட மாயமென்ன!


OM SHAKTHIVEL




Shakthi Vel Hindu Association
www.shakthivel.co.uk
Tel: 0203 640 8113




படங்கள்: K. V. Samy
ரூபன்,
சுதா (U.K.)
N. பிரசாந்தன் (U.K.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org